முரசொலி

வார இதழ்

ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 2 | 2-3-56 | வெள்ளி | ஒலி 48

ஆட்டக் காவடி

கருணாநிதி



(6-ம் பக்கம்)

நடுசாமியார் குரல்!

(பக்கம்-9)

Best copy available

புரட்டுக்குப் புது வக்கீல்!

கூட்டுக் குரல் எழுப்புவோம்; கொள்கை முரசறைவோம்; நமக்கென ஓர் கொற்றம் காண்போம்; நற்றிறம் படரா கோலேந்திகளின் இதயக் கடிவாளங்களை இழுத்துப் பிடிப்போம்; என்ற லட்சியத்தோடு இணைந்து — அறிவு விளக்கு அணைந்து கிடக்கும் காங்கிரஸ் மண்டபத்தை நோக்கி; காட்டாற்று வேகத்தில், ஆனால் கண்யத்தோடு— அணி வகுத்திருக்கும் கூட்டணியின் நோக்கத்தை, குதர்க்க வாதம் பேசி, வேறு திசையில் திருப்ப நினைக்கிறார், கை தூக்குவதற்கும்; கரம் தட்டுவதற்கும் என்றே அமைச்சரவையில் கட்டப்பட்டிருக்கும் சிலரில் ஒருவரான தோழர் பக்தவத்சலம் அவர்கள்!

கல்யாண வீட்டில் கண் கசக்குபவர்களாம் நாம்! பாதை தவறி பனப்பாக்கம் என்ற சிற்றூரில் பேருரையாற்றி இருக்கிறார் இந்த பெருந்தகை!

விவசாய மந்திரியாயிற்றே இந்த பூமான்; விளைச்சலைப் பற்றியும் — தொழில்துறை வளர்ச்சியைப் பற்றியும், விளக்கவுரையாற்றுவார்; வேண்டிய தேவைகளுக்கு வழிவகை செய்வார்; நம் துயர் துடைக்க மார்க்கம் காண்பார்; அதற்கென மாதா மாதம் ஆயிரத்தை விழுங்கிக் கொண்டிருப்பவராயிற்றே, என்றெல்லாம் எண்ணியிருப்பர்; அந்த ஊர் விவசாயப் பெருமக்கள்! ஆனால் அங்குதான்; பிரச்சனையை தலைகீழாக்கி; போன காரியத்தை மறந்துவிட்டு, பக்தவத்சலனார் நம்மீது பாய்ந்திருக்கிறார்; பதறி இருக்கிறார்!

ஒதுக்குப் புறத்தில் ஒன்பது பேரை நிறுத்திவைத்துக்கொண்டு துணிந்து ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார், அமைச்சர்,

''தமிழுக்கு என்ன பாடுபட்டார்கள் இவர்கள்?''—என்று!

தலை குனிகிறோம், தமிழினத்திலே பிறந்துவிட்ட இவர் இப்படி பேசிவிட்டாரே என்பதற்காக!

கூட்டணியை சாடுவதுபோல் ஆரம்பித்து; ஓயாமல் அவர் கண்ணையும்–கருத்தையும், குத்திக்கொண்டிருக்கும் நம்மை நோக்கி கணையைத் திருப்பிவிட்டிருக்கிறார்; இழிகுணத் தொட்டிலிலே ஊஞ்சலாடிக்கொண்டிருக்கும் மந்திரியார்.

'தமிழுக்காக நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்?' தலைநிமிர்ந்து கேட்டிருக்கிறார்; எலி மனம் கொண்ட இந்த அமைச்சர்!

பொட்டுப் பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் 'பக்தவத்சலங்கள்' அடங்கிக் கிடந்தபோது; கூட்டை உடைத்துக் கிளம்பிய புலியென; மொழி காக்கப் புறப்பட்ட நம்மைப் பார்த்துதான் கேட்கிறார்; என்ன செய்துவிட்டீர்கள் என்று?

இறுமாப்பால் இதயத்தைத் கருப்பாக்கிக் கொண்டிருக்கும் கண்ணியவான்களுக்கு, 'பாரீர்! இதயமற்றவர்களே! தமிழுக்காகவே செத்தவன் நான் உம்மைப் போல சுயமரியாதையை ஏலம் விட்டுத் திரிந்தவனல்ல' என்ற அழகிரியின் கல்லறை எழுப்பும் உணர்ச்சிக்குரல்; கேட்பதற்கு நியாயமில்லைதான்!

மண்டை பிளந்து, மார்பெல்லாம் குருதி ஓட, மடை திறந்த வெள்ளமென, தடி தூக்கிய சிப்பாய்கள் தாக்கியபோதும், ''தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!'' என்று சொல்லிச் சொல்லி, நாவறண்டு, நெஞ்சம் சூடேறி; உயிர் விட்ட தாலமுத்து, நடராசன்; நினைவுக் கோபுரங்களைத் தியாக முத்திரையாகப் பெற்றுள்ள நம்மைப் பார்த்துதான், என்ன செய்து விட்டீர்கள், என்று நெஞ்சு நிமிர்த்திக் கேட்டிருக்கிறார் விவசாய அமைச்சர்!

மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க, ஒரு முறை குறிப்பிட்டார். ''இன்று தமிழகத்தில் யாங்கணும் விழிப்பு, எழுச்சி, எவரிடத்தும் தமிழுணர்ச்சி! தமிழன் என்றால் ஒரு களிப்பு; தமிழ் என்றால் ஒரு கிளர்ச்சி! தமிழகம் என்றால், சிந்தையிலே மகிழ்ச்சி! பார்க்குமிடமெங்கும் மொழிப்பற்று, இன உணர்வு, இடைக் காலத்தே இருண்டு கிடந்த, உறங்கிக் கிடந்த, இந்த உணர்ச்சி, எப்படி எழுச்சி பெற்றது, இந்த மாற்றத்துக்கு யார் காரணம்? எவரால் இந்த முன்னேற்றம்? எப்படி நிகழ்ந்தது?'' இப்படி சில வினாக்களை எழுப்பி விட்டு, பலத்த ஆரவாரத்துக்கிடையே பதிலிறுத்தார், இந்த மாற்றத்திற்கெல்லாம், **திராவிடர் இயக்கம்தான் காரணம்'** என்று!

அந்த தமிழுணர்ந்த மேதையின், செல்வத் தமிழ் நீரோடையின், தமிழ்த் தென்றலின், குயிலினும் இனிக்கும் குரல் நமக்குத் தந்த நற்சாட்சிப் பத்திரத்தை, தமிழகம் உள்ளவரை; தமிழ் நிலைத்திருக்கும் வரை; ஒரு தமிழன் உயிரோடு இருக்கும் வரை யாரும் மறக்க முடியாது!

''தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'' என்று குரலெழுப்பும் கொள்கைச் சீயங்களைப் பார்த்து தான—குத்திப் பேசுகிறார்: கோபுரத்து உச்சியிலே தொத்திக் கொண்டிருக்கிறோம் என்ற நினைப்போடு!

அடுத்து வர விருக்கும் தேர்தல் காற்று! அதை நினைத்து அமைச்சருக்கு வந்திருக்கும் ஜுரம்; ஜன்னியாக உருவெடுத்திருக்கிறது அதன் விளைவுதான இந்தப் பிதற்றல்கள்!

''தமிழ் நாட்டுக்கு ஆபத்து வந்து விட்டது என்று ஓலமிடுகிறார்களே என்ன ஆபத்து வந்துவிட்டது? இவர்கள் பேசும் கூட்டங்களில் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்கள் ஆண்ட நாடு இது என்கிறார்கள், மூவேந்தரில் ஒருவர் திருவாங்கூரில் ஆட்சி செலுத்த வில்லையா? தேவிகுளம், பீர்மேடு எங்கு போய் விட்டது? இதற்குள் என்ன அவசரம் இவர்களுக்கு! காரணம் இன்னும் ஒரு வருடம் இருக்கிறது தேர்தல் வர.

தேர்தலில்சர்க்காரைக் கைப்பற்றவே இவர்கள் இப்படி செய்கிறார்கள், இதற்காகத் தான் கூட்டு முன்னணியை ஏற்படுத்தினார்கள்; வெள்ளையனைக் கண்டே பயப்படாத நாங்கள் இவர்கள் மிரட்டலுக்கா பயப்படப் போகிறோம்; பொது மக்கள் இவர்களுக்கு ஆதரவு தரமாட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்?''

பொதுமக்கள் ஆதரவு இருக்காதாம்! 19—20, சென்னையைப் பார்த்த பிறகும், இப்படியொருவர் பேசி இருக்கிறார் என்றால், சிந்தையிலே தெளிவு இருக்கும் ஒருவரின் பேச்சு இது என்பதை யாருமே ஒப்புக் கொள்ள மாட்டார்கள்!

புயலா? புது வெள்ளமா? புகை கக்கும் எரிமலையா? பிப்ரவரி 20ம் தேதிய சென்னை! இப்படி அன்று திகைப்படைந்த மனிதர்களின் இதயத்துடிப்பு இன்றளவும் 'படபட' வென்று அடித்துக் கொண்டிருக்கிறது. அன்றைய தினம் ஆதிக்க வாதிகளுக்கு ஏற்பட்டஅதிர்ச்சி இன்னும் ஓய்ந்தபாடில்லை; இந்த நிலையிலேதான், கேலிக்குரிய குரல் எழுப்பியிருக்கிறார் 'இவர்களுக்கு பொது மக்கள் ஆதரவு' இல்லை என்று! 'உரிமை பறி போகிறதே—உல்லாச புருடர்களே, ஏன் ஊமையாகி விட்டீர்கள்; உணர்ச்சியற்ற மரக் கட்டைகளா நீங்கள் எல்லாம்?' என்று நாடெழுப்பிய கண்டனக் குரல் ஓலமாம்! வெட்கம், வெட்கம்!

சுவரேறிக் குதித்தவனோடு சோரம் போனவள், கணவனிடம் வீரம் பேசிய கதைபோல இருக்கிறது இது!

'என்ன ஆபத்து வந்து விட்டதாம்' தமிழக சரித்திரத்திலே அவமானச் சின்னமாக, திரைக்குப் பின்னால் தள்ளப்பட வேண்டிய பக்தவத்சலனார், கேட்கிறார், என்ன ஆபத்து வந்து விட்டது என்று!

வரட்டும்! வரட்டும்! வரப்போகும் தேர்தல், இந்த அமைச்சரின் தீராத சந்தேகத்திற்கு பதில் சொல்லாமலா போகும்!

இறுமாப்பு இதயத்தில் கூத்தாட, வரப்போகும் பொதுத் தேர்தல் விலாவைக் குத்த, திமிரோடு பேசி இருக்கிறார். 'ஏன் ஓலமிடுகிறீர்கள் என்ன ஆபத்து வந்து விட்டது? என்று!'

இவர் வினாவிற்கு விடை சொல்லிக்கொண்டிருக்கும் அளவிற்கு கூட்டணித் தலைவர்களுக்கோ, நாட்டு மக்களுக்கோ ஓய்வில்லை! அப்படி ஓய்விருந்தாலும், முறையிடுகிற அளவிற்கு இவர் ஒன்றும் பெரிய மனிதர் அல்ல! அதுதான் இந்த தேராத அமைச்சருக்கு நாடு சொல்லவிருக்கும் பதில்! இன்றல்ல, நாளை — ஒரு நாள்—வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, 'ஓட்டுப் பிச்சைக்கு வராமலா இருக்கப் போகிறார்-அன்று சொல்வார்கள்; 'ஆணவக்காரரே! அன்று கேட்டீரே என்ன ஆபத்து என்று! ஓடி விடுங்கள் இங்கிருந்து உடமை பறிபோவதைக் கண்டும் ஊமையாகிக் கிடந்த உங்களுக்கு பதவி ஒருகேடா? உம் போன்றவர்களை பதவியில் ஏற்றி விடுவதுதான் தமிழகத்திற்கு முதல் ஆபத்து என்று கூறத்தான் போகிறார்கள்; அந்தநாள் வெகுதூரத்தில் இல்லை, தேர்தலே—நீ வேகமாய் ஓடி வா! என்றுநாடு வரவு கூறிக் கொண்டுதான் இருக்கிறது, இந்த வக்ரபுத்திக்காரர்களுக்குப் பாடம் கற்பிக்க!

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

தொடராது-முடிவில்லை!

சர்க்கார் 'ஜீப்' கார் வாங்கியதில் ஏற்பட்ட ஊழலைக் குறித்து மக்கள் சபையில் தோழர் ஒருவர் வாய் திறந்தபோது, 'இதெல்லாம் நடந்துபோன விஷயம், இனி இதுபோன்ற தவறுகள் தொடராது' என்று சொல்லி, அந்தத் தோழரை வாய் மூடச் செய்தாராம் நேரு பண்டிதர்.

ஆனால், சென்றகிழமை மக்கள் சபையில் வெளியான கணக்குத் தணிக்கை அறிக்கை, நிர்வாகத் துறையில் எவ்வளவு பணம் வீணாகிறது என்பதை அறிவித்திருக்கிறத.

பாதுகாப்புத் துறையில் தேவைக்கு அதிகமான மோட்டார்கள் வாங்கியதில் ஏழு கோடி ரூபாய் வாரி இறைக்கப் பட்டிருக்கிறதாம்!

விமானப்படை அதிகாரிகள் ஒரு முறை செய்த பயணத்திற்கு இரு முறை பயணப்படி சர்க்காரிடமிருந்து வாங்கி விட்டனராம்.

மக்களின் வரிப்பணம் இப்படி யெல்லாமா பாழாக வேண்டுமென்று —நாமல்ல, சர்க்காரின் தணிக்கை அறிக்கை, கண்ணீர் விடுகிறது. தொடராது என்றார்–ஆனால் ஊழல்களுக்கோ ஒரு முடிவில்லை!

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 2--3--56 வெள்ளி

வெற்றி முழக்கம்!

காலம் மறந்து, அரசியல் நாகரிகம் துறந்து அவ்வப்போது நெருப்பு மொழிகளை நல்லவர் என்றும் பொல்லாதார் என்றும் கருதாது, மாறி மாறிப் பொழிவதையே பொழுது போக்காகக் கொண்டிருக்கும் இந்த உபகண்டத்து முதலமைச்சர் சென்ற கிழமை நடைபெற்ற பார்லிமெண்ட் கூட்டத்திலே சற்று கண்ணியம் பெற்று, அவர் அணைத்து சிறக்கிற ஆசனத்திற்கேற்ற பொறுப்புணர்ச்சி கொண்டு, தமிழகத்திலே பிப்ரவரி 20-ந் தேதி புறப்பட்ட புயலின் தன்மையை விமர்சிக்க முயற்சித்திருக்கிறார்.

சர்வகட்சிக் கூட்டணியின் ஆணைக்கிணங்கி அன்றைய தமிழகம் ஆமையைப்போல அடங்கி, மாலை நடந்த பொதுக் கூட்ட வைபவங்களிலே புலியின் சீற்றத்தைப் பெற்றிருக்கிறது

செங்குருதி தனிற் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சு எமது மூச்சு —என தோள தட்டி; எத்தர்கள் கூடாரத்தைத் தூள்தூளாக்கும் வீறு கொண்ட காளைகளை—தலைவர் விடுத்த அன்புக் கட்டளை அடக்கி ஆண்டிருக்கிறது.

இருந்தும் அன்று செந்தமிழர் பெற்ற தியாகத் தழும்புகள் வழக்கம் போல் குறைந்ததல்ல!

கடலூர் தோழர் கோவிந்தசாமி எம்.எல்.ஏ. விடுதலை எண்ணம் தவிர வேறு விடுதலை விரும்பாக் கடமையாளர்! அவரைத்தான் கொள்ளைக்காரராக்கி கூண்டுக்குக் கொண்டு வரப்போகிறது, இந்த மாநிலத்து அரசாங்கம்!

சென்னையிலே தோழர்கள் ஜீவானந்தமும், வேங்கட்ராமனும் தடியடிபட்ட அந்த நேரம் தாயகத்தின் வெவ்வேறு முனைகளிலே தமிழர்களின் வீரம் சோதிக்கப்பட்டிருக்கிறது. அருமை நண்பர் கோவிந்தசாமி அரசியலாரின் குருட்டுக் கண்களுக்குத் திருட்டுத்தனம் புரிந்தவராகக் காட்சியளித்துக், காவல் தண்டனை பெற்றிருக்கிறார்! திருச்சி கோவை போன்ற இடங்களிலே பலர் அடக்கு முறையின் செங்காக்குகளுக்குப் பலியாகி யிருக்கின்றனர்! மாநில மெங்கும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தோழர்கள் காராக்கிரகத்தை உறைவிடமாகக் கொள்ள வேண்டிய நிலைமை பிறந்திருக்கிறது.

இருந்தும் தமிழகம் அமைதி வழி நின்று கடமையாற்றத் தவறவில்லை! தலைவரின் ஆணையைத் தலை மேலேற்று தாயகம் தனது காணிக்கையை அன்று செலுத்தியிருக்கிறது.

"அர்த்தால் சென்னை இராஜ்யம் முழுவதும் நடைபெற்று இருக்கிறது. அமைதியான முறையிலேயே அர்த்தால் நடைபெறும் என்பதைத் துவக்கத்திலேயே, அதைத் துவக்கியவர்கள் விளக்கமாக அறிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அர்த்தாலை மிகவும் அமைதியான வகையில் நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதை அறிவிக்க காங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். சென்னையில் நடைபெற்ற அர்த்தாலை பம்பாய், கல்கத்தாவில் நடைபெற்ற அர்த்தால்களுடன் ஒப்பவைத்துப் பார்த்து, பண்டித நேரு தமக்குத் தாமே ஒரு முடிவுக்கு வரட்டும்" என்று பெருமையோடு அறிவிக்கிறது சர்வகட்சிக் கூட்டணி.

"பொது ஜனப் போராட்டத்தில் ஒரு பெரிய நன்மை இருக்கிறது. பொது மக்களுக்கு அரசியல் கல்வி அளிப்பதற்கு இதைக் காட்டிலும் சிறந்த முறையோ, துரிதமான வழியோ வேறு கிடையாது!"

—என்று எந்தப் பண்டிதர் தனது சிறைக் கடிதங்களில் கூறினாரோ, அதை அப்படியே வரிக்கு வரி உண்மையாக்கி, தமிழகத்து மாந்தருக்கு மாபெரும் அரசியல் பாடமொன்றைப் போதித்து விட்டது, சர்வ கட்சிக் கூட்டணி! "பஞ்சசீலம் பேசும் பண்டிதரின் வஞ்சகத்தைப் பாரீர்! கிளர்ந்தெழுந்த உரிமைக் கொடியை அவர் உதைத் தெரியும் தன்மை காணீர்!"—என்று மாபெரும் 'ஆத்திச் சூடி'யை உருவாக்கித் தந்துவிட்டது, பிப்ரவரி 20!

நேருவின் அநீதியையும், காமராசரின் கோழைத்தன்மையையும், கோபுர மேறிக் கர்ஜித்து விட்டது பிப்ரவரி 20!

—தமிழகம் கண்டிராத இந்த மகத்தான அர்த்தாலில்தான் பலாத்கார வாடை வீசுவதாகப் பறைசாற்றுகிறார், பண்டிதர்!

ஆனால் தமிழரின் ஏகோபித்த எழுச்சிக் குரலுக்கு மதிப்பு தந்து நேரு உதிர்த்திருக்கும் சில வார்த்தைகள்கூட சர்வகட்சிக் கூட்டணிச் செயற் குழுவின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

"பண்டித நேரு பின்வருமாறு கூறினதாகத் தெரிய வருகிறது:—

'எல்லையோரத்திலுள்ள ஒரு சிறு நிலப்பகுதிக்காகவே சென்னையும், கேரளமும் பிணங்கிக்கொண்டிருப்பதில், அப்பகுதியே தீர்மானித்துக் கொள்ளட்டும் என்ற கருத்தை ஒருவரால் புரிந்து கொள்ளமுடியும்; அதாவது, அங்கிருக்கும் மக்கள் முடிவு கட்டிக் கொள்ளட்டும் என்கிறேன்.'

"இது ஜனநாயகக் கோட்பாடாகும். இக்கோட்பாடு செயலாற்றப்பட வேண்டும் என்பதே நமது குறிக்கோள்."

—என்று அவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் படியே, எல்லாம் நடைபெறுமானால் இந்த நாட்டுக் காங்கிரஸ் இயக்கத்தைக் கௌவியிருக்கும் மாபெரும் மரண ஆபத்தை தவிர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பதை பண்டிதர் உருவாக்கிக் கொள்ளலாம்.

அன்றைய தினம் பார்லிமெண்டில் பேசிய பண்டிதர் குறிப்பிட்டாராம், 'தமிழகத்தை எப்படியாவது இந்திய யூனியிலிருந்து பிரித்து விடப் பார்க்கும் இயக்க மொன்று அர்த்தாலை நடத்தி'யதாக!

மும் முனைப் போராட்டத்துக்குப் பிறகு—காடெங்கும் ரயில் வண்டிகள் நின்ற பிறகு—இப்போதுதான் பண்டிதரின் நாக்கு நாகரீகம் பெற்றிருக்கிறது. அந்த அளவுக்கு அவர் நமது பாராட்டுகளைப் பெறத்தக்கவராகிறார்!



"சிறுத் தொண்டர் புராணம்"— நம்ப முடியாத கதை: ஆனாலும், காங்கிரஸ்காரர்கள் நடத்துகிறார்கள்!

பழமைப் பாறையில் ஒரு பனித்துளி!

பி. சி. கணேசன்
பி. எஸ்ஸி; பி. டி.

பிரிட்டிஷ் மந்திரி சபையில் அயல்நாட்டு மந்திரியாக அங்கம் வகித்துவரும் ஜான் ஸெல்வின்புருக் லாயிட், கன்சர்வேடிவ் வானத்தில் புதிதாகத் தோன்று ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் புதிய தாரகை, ஐம்பத்திரண்டு வயதுடைய ஸெல்வின் கன்சர் வேடிவ் கட்சி முன்னணித் தலைவர்களில் மிகவும் இளைஞர். பிரிட்டிஷ் அரசியலில், அதிலும் குறிப்பாக கன்சர்வேடிவ் கட்சி அரசியலில், இளந்தலைவர்களுக்குப் பொறுப்புள்ள பதவி அளிப்பது மிகவும் அரிது. ஐம்பது வயதினைத் தாண்டி சில ஆண்டுகளே ஆகியிருக்கும் பொருளாதார நிபுணர் கெயிட்ஸ்கில்லை தொழிற்கட்சி, ஆட்சியின் இடத்தில் தலைவராகத் தேர்ந்தெடுத்ததைப் போலவே, பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் மந்திரி சபையின் தலைவரான ஈடன், ஹரால்ட் மாக்மில்லனை அயல்நாட்டு மந்திரி பதிவியிலிருந்து நிதி இலாகாவிற்கு மாற்றி, அயல்நாட்டு இலாகாவை ஸெல்வின் லாயிடம் ஒப்படைத்திருக்கிறார். இம்மாதிரி ஆங்கிலநாட்டு அரசியலில் இளந் தலைவர்களிடம் பொறுப்புள்ள பதவிகளை அளித்திருப்பது, பிரிட்டிஷ் மக்களின் அரசியல் கருத்துக்கள் எந்தத் திசை நோக்கி உருவாகிக் கொண்டிருக்கின்றன— என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

தூய்மையான உடையிலேயே எப்பொழுதும் காட்சியளிக்கும் ஸெல்வின், அசையாத தன்னம்பிக்கை உடையவர். ஜனநாயகக் கருத்துக்கள் உலகத்தில் வாழ வேண்டுமானால், அக் கருத்துக்களுக்கு ஆக்கமளிப்போர், சில்லறை வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டுப் பணிபுரிய வேண்டுமென்பது அவருடைய ஆசை. நெருக்கடியான கட்டத்தில் சில்லறை வேற்றுமைகளைப் பெரிதாக்கி ஒதுங்கி நிற்கமுயல்வோருக்கு ஸெல்வினின் கருத்து ஒரு சிறந்த பாடமாகும். அயல்நாட்டு இலாகாவின் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டதிலிருந்து, இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே வெளிநாட்டுக் கொள்கைகளை வகுத்து வருகிறார்.

கன்சர்வேடிவ் கட்சித் தலைவர்கள் பெரும்பாலும் பணக்கார, பிரபுக்களின் குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகத்தான் இருப்பது வழக்கம். ஆனால் அதற்கு விலக்காக ஸெல்வின், ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர். சீமான்களின் சிறுர்கள் பயிலும் ஈடன் பள்ளியில் கல்வி பயின்றவருமல்ல அவர்! மாக்டலின் கல்லூரியிலும், எடின் பரோவிலுள்ள ஃபெட்டிஸ் கல்லூரியிலும் கல்வி பயின்ருர். இலக்கியத்திலும் சரித்திரத்திலும் ஆனர்ஸ் பட்டம் பெற்றவர் அவர். படிக்கும் பொழுதே, கல்லூரி மாணவர் மன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றி வந்திருக்கிருர். பிறகு சட்டம் பயின்று வழக்கறிஞரானுர்.

லிவர்பூல் நகரத்தில், இன்ஷ்யூரன்ஸ் சட்டம் பற்றிய நுணுக்கமான அறிவோடு, வக்கீல் தொழில் நடத்திய அவருக்கு ஏராளமான வருவாய் கிடைத்தது. முப்பத்திரண்டாவது வயதில்தான் அரசியலில் பங்கு பெறலானுர்; லிவர்பூல் கவுன்சிலின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். இரண்டாவது உலகப் பெரும்போரின்போது, நாட்டுப் பற்ருல் உந்தப்பட்டு, வக்கீல் தொழிலை உதறியெறிந்து, படையில் சேர்ந்து பிரிகேடியராகப் பணியாற்றினுர். கடல் தாண்டிச் சென்று, தாயகத்தைக் காத்தும் போரில் முழுமூச்சோடு ஈடுபட்டு சி. பி. இ என்ற விருது பெற்ருர். இன்றும் அவர் படையில் ஒரு கௌரவ க(ர்)னல்!

1945-ம் ஆண்டு பிரிட்டனில் நடந்த பொதுத் தேர்தலின் போது, கன்சர் வேடிவ் கட்சியின் சார்பாக லிவர்பூல் தொகுதியிலிருந்து பார்லிமென்ட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலிருந்து பார்லிமென்டில் அவருடைய குரல் கம்பீரமாக ஒலிக்க ஆரம்பித்தது! பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி ஒரு புதிய தளபதியைக் கண்டது. *1950* லிருந்து, ஸெல்வின் பிரிட்டனலில் அரசியல் சக்தியாக உருவானுர். தொழிற் கட்சியை எதிர்த்துப் பல சமயங்களில் விவாதத்தை ஆரம்பித்து வைத்த பெருமை அவரையே சாரும்.

கன்சர்வேடிவ் கட்சி அமைப்பிற்குள் ஸெல்வினைக் கொண்டு வந்த பெருமை, முன்னாள் நிதி மந்திரி பட்லரையே சாரும். புதிய தலைவர்களை முளையிலேயே அழித்துவிடும் 'பண்பு' பிரிட்டிஷ் தலைவர்களிடையே இருந்திருந்தால், ஸெல்வின், கெயிட்ஸ்கில், பெவான் போன்ற தலைவர்களைப் பிரிட்டன் கண்டிருக்கவே முடியாது. பழமை தலைவர்கள் அரசியலிலிருந்து ஓய்வு பெறுமுன், புதிய தலைவர்களை உருவாக்கி, வளர்த்து, தங்கள் இடத்தை நிரப்பும் தகுதி பெற்றவர்களாகச் செய்வதுதான் பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயம். பிரிட்டனின் ஜனநாயகம் சீர் குலையாமல் வளர்ச்சி பெற்றுத் தழைப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஈடனின் அமைச்சரவையில் வெளி விவகார மந்திரியான ஸெல்வினும், நிதியமைச்சரான மாக்மில்லனும் இரு பெரும் சக்திகள். கன்சர்வேடிவ் கட்சியின் எதிர்கால வாழ்வில் இவர்கள் இருவருக்கும் நல்ல செல்வாக்கிருக்கிறது. ஈடன் மந்திரி சபைப் பொறுப் பேற்றவுடன், ஸெல்வினிடம் பாதுகாப்பு இலாகாவை ஒப்படைத்தார். அமைச்சரவையைச் சமீபத்தில் மாற்றியமைத்தபொழுது ஸெல்வினிடம் வெளி நாட்டிலாகாவை ஒப்படைத்தார். ஸெல்வினைத் தலைமைப் பதவிக்கு உரியவராக்குவதில் ஈடன் காட்டும் கவனத்திற்கு இவை சான்றுகள்.

அகில உலக அரங்கில் ஏற்கனவே ஸெல்வின் நிறைய புகழ் சம்பாதித்துக் கொண்டிருக்கிருர். ஐக்ய நாடுகள் சபையில் பிரிட்டிஷ் தூதுக் குழுவின் தலைவராகப் பல ஆண்டுகள் திறம்படப் பணியாற்றி இருக்கிருர். ஐ. நா. சபையில் இரஷ்யத் தூதுக் குழுவின் தலைவராக இருந்த விஷின்ஸ்கிக்கு சரியான 'எதிரி' யாக அமர்ந்திருக்கிருர்.

கன்சர்வேடிவ் கட்சியின் பெருந் தலைவர்களான ஈடன், பட்லர் போன்ருரின் வரிசையில் வைத்து எண்ணப்பட்டவேண்டிய ஒரு சிறந்த அரசியல் அறிஞராக ஸெல்வின் லாயிட் விளங்குகிருர். பிரபுக்களின் செல்வாக்கு மிகுந்துள்ள கன்சர்வேடிவ் கட்சியில் ஸெல்வின் லாயிட் போன்ருருடைய நுழைவால் ஒரு புத்துணர்ச்சி தோன்றியிருப்பதாக பிரிட்டிஷ் மக்கள் கருதுகிருர்கள்.

ஸெல்வின் தன்னுடைய இளம் மனைவியான அழகி எலிஸபெத் மார்ஷலோடு ஒரு சாதாரண வீட்டிலேயே வசித்து வருகிருர். அவருக்கு மூன்று வயதுப் பெண் குழந்தையொன்று இருக்கிறது.

மாரிசன், எர்னஸ்ட்பெவின், சர்ச்சில், ஈடன் முதலியோர் அணி செய்த வெளி நாட்டிலாக பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் ஸெல்வின் லாயிட் அவர்களைப் போலவே ஒரு சிறந்த ராஜதந்திரியாக விளங்குவார் என்று பிரிட்டிஷ் பொதுமக்களும், உலகமும் எதிர்பார்ப்பது இயற்கைதானே?

★

வருந்துகிரும்

8-2-56-ல் தோழியர் சத்திய[illegible]வாணி முத்து அவர்களின் தந்[illegible]யார் திரு. க. நாகை நாதர் இய[illegible]ற்கையெய்தினுர் என்ற சோகச்[illegible] செய்தி கேட்டு வருந்துகிரும்[illegible]. தந்தையாரை இழந்த தோ[illegible]ழியருக்கும், அவர் குடும்பத்தாரு[illegible]க்கும் நம் ஆழ்ந்த அனுதாபங்களை[illegible]த் தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

மதுரையில் மாபெரும் கலை விழா

11-3-56 ஞாயிறு இரவு 10 மணிக்கு,

மதுரை தமுக்கம் மைதானம் திறந்தவெளி அரங்கில்,

அறிஞர் அண்ணு

அவர்கள் தலைமையில்

—கலையுலகச் செல்வங்கள் ஒரே மேடையில் நடிக்கும்—

நாடகப் பெருவிழா.

★

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம்
குழுவினர் நடிக்கும்
"விலாங்கு மனிதன்"

★

நடிப்பிசைப் புலவர், கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும்
அறிஞர் அண்ணுவின்
"வேலைக்காரி" (நாடகத்தில் சில காட்சிகள்)

★

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் நடிக்கும்
அசோகன் (ஓரங்க நாடகம்.)

★

நடிப்புச்செல்வர் எஸ்.எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்
கலைஞர் கருணுநிதியின்
"மணி மகுடம்" (நாடகத்தில் சில காட்சிகள்)

மற்றும் நடிகை, ராஜ சுலோசனு முதலியோர் பங்கேற்கும் நாடக நிகழ்ச்சிகள் நடைபெறும்.

கட்டணம்: ரூபாய் 5, 3, 2, 1.

அமைப்பாளர்,
எஸ். முத்து.

சுப்பிரமணியனார் சிந்தனைக்கு...!

அதோ மயக்கம் போட்டு விழுந்துகிடக்கிற பையனை உயரே பறக்க வைக்கிறேன். ஒரு ஆள் உயரத்திற்கு எழுப்பிக் காட்டுகிறேன்... அதற்கு முன்பு ஒரு முறை பலக்க கை தட்டுங்கள்!...

இரக்கமுள்ள மகராஜன்களே! இந்தஊர் பெரியகோயில் ஆணையாகச் சொல்லுகிறேன்- எல்லைக் காளியாத்தா பேரில் சொல்கிறேன... மடியிலே காசு உள்ள கனவானெல்லாம் காலணாவாவது போட்டு விட்டுப் போங்கோ; உங்க பிள்ளைக்குட்டி நல்லா வாழ காலணா போடுங்கோ; என் சாபம் வீட்டை சுத்தாமலிருக்கக் காலணா போடுங்கோ!

—முச்சந்தியிலே வேடிக்கை காட்டும் 'மந்திரவாதிகள்' இப்படியெல்லாம் பேசுவதை கூடியில் பலர் கேட்டிருக்கலாம். சாமியின் மேல் ஆணையிட்டதும் வைதீக மனம் கொண்டோர் புழுங்குவர்; ஏனடா இங்கு வந்தோம் என ஏங்குவர். மற்றும் சிலர் அந்தக் கணம் மட்டும் கேளாக் காதினராக மாறி கூட்டத்திலிருந்து நழுவி விடுவர்.

குட்டிச் சாத்தான் பெயரைச் சொல்லி, வயிறு வளர்க்கும் மந்திரவாதியின் நிலைமையிலேதான் இன்று சுப்ரமணியம் மாறியிருக்கிறார்.

தட்சிணப் பிரதேசம் என்று பெயர் வைப்போம்; அதில் தண்டமிழ் பிரதேசத்தையும் கேரள, கன்னட, மலையாள பிராந்தியத்தையும் இணைப்போம்-என்று வக்கணை பேசியவர், சுதியைக் குறைத்துக் கொண்டு, தாளத்தின் மாத்திரையையும் மாற்றிக்கொண்டு புதுப் பாட்டு பாட ஆரம்பித்திருக்கிறார்.

குருநாதர் ஆச்சாரியாரின் குயுக்தி யோசனையோ என்னவோ தட்சிணப் பிரதேசம் தமிழர் தம் தன்மான இரத்தத்தை மடை கோலி விட்ட பிறகுதான் தோன்ற முடியும் என்று தெரிந்ததும் 'புதுக்கரடி' ஒன்றைப் படைத்திருக்கிறார் கோவைக் குமாரர்.

இந்தியாவின் மாஜி கவர்னர் ஜெனரலுடைய மதிப்புக்குரிய ஆதரவு இருக்கிறது அதற்கு! இருந்தும் அந்தக் கரத்து கன்னட பூமியிலே செலாவணியாக முடியவில்லை; தெலுங்குச்சீமையிலே அது தஞ்சம் புக முடியவில்லை!

எனவேதான் புது வேஷம் போட்டு சுரண்டல் இயந்திரத்தை முடுக்கிவிடப் பார்க்கிறார்கள், சூழ்ச்சிக்காரர்கள்!

இமயம் தேய்ந்து எறும்பான கதையாக, மலையாளம்-கன்னடம்-ஆந்திரம்-தமிழகம் அடங்கிய தட்சிணப் பிரதேச யோசனை இன்று சின்னாபின்னமாகச் சிதறடிக்கப் பட்டு விட்டது!

சென்னையிலே 26-ந் தேதி சுப்ரமணியனார் பேசுகிறார், சென்னையும், கேரளமும் இணைந்தாலே போதுமென்று!

முச்சந்தி மந்திரவாதி தரையிலே விரித்திருக்கும் துணியிலே நாணயங்கள் விழ மறுத்தால், ஊர்க் கடவுள்கள் மேல் ஆணையிட்டு, கூடியிருப்போரை யெல்லாம் மறைமுகமாகப் பயங்காட்டி மடியை அவிழ்க்கும் கதையைப் படித்தோம்!

அதைப் போலத்தான் அன்று அமைச்சர் சுப்ரமணியமும்பேசியிருக்கிறார். தமிழ்நாடு வளமுற வாழ்வதற்கும், செழிப்பு பொங்குவதற்கும் இந்த யோசனை யென்று!

"தமிழ் நாட்டு மக்கள் ஆழ்ந்து சிந்தித்துப் பார்ப்பதற்குத்தான் நான் இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இதை முடிவு செய்யும் விஷயம் பொது மக்களைப் பொறுத்ததாகும்"

—சுப்ரமணியனாரின் வாசகங்கள்தான் இவை!

கொல்லைப்புறமாக 'குருதேவரைக் கொலு மண்டபத்துக்கு அனுப்பி விட்டு—மக்களுடைய பிரதிநிதிகளைக் கலக்காமல் குலதர்மக் கல்வித் திட்டத்தை நாட்டிலே நடமாட அனுமதித்து-எதிர்த்துக் கேட்டவர்களை யாரென்று பாராமல் சாரற்ற சக்கையாக்க நினைத்த சாணக்கியரின் சீடர் தான் இன்று தத்துவஞானியைப் போலப் பேசுகிறார், 'பொது மக்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்று'!

அது மட்டுமோ? கேரளமும் தமிழகமும் இணைந்துவிட்டால் இரண்டு பகுதிகளுக்கும் ஒரு கவர்னராம்; ஒரு உயர்நீதிமன்றமாம்; அரசாங்க உத்யோகங்களைக்கூட மலையாளிகளுடைய எண்ணிக்கைப் படியும், தமிழர்களுடைய மக்கட் தொகைப் படியும் பங்கிட்டுக் கொள்ளலாமாம — கூறுகிறார், சுப்ரமணியனார்!

பங்கஜம் துரைராஜன்என்ற பார்ப்பன மங்கையைக் கொண்டு உயர்நீதிமன்றத்தில் வழக்கு போடச் செய்து, அல்லாடிகளை அழைத்து சட்டத்தைத் திருப்பச்செய்து, மக்கட் தொகை எண்ணிக்கைப்படி அரசாங்கப் பணிகளைப் பிரித்துக் கொள்ளலாம் என்ற எந்தக் கம்யூனல் ஜி. ஓ. வை கழுத்தை நெறித்துக் கொன்றார்களோ, அந்த ஜீவராசிகளின் அடிவருடியார் சுப்ரமணியம் தான் இப்படிச் சொல்மாரி பொழிகிறார்!

கம்யூனல் ஜி. ஓ. தேவை யென்று நாம் கூறியபோது தேள்கடியால் தாக்குண்டவர்கள் போல் துடித்தார்கள்; மக்கட் தொகைப்படி எல்லா உத்தியோகங்களையும் பங்கு போடு என்று பறைசாற்றியபோது தாவிப்பாய்ந்து நம்மைத் தாக்க வந்தார்கள்!

—இன்றோ வெட்கத்தை மறந்து அதே காரணத்தைக் காட்டி வேறொரு காரியத்தைச் சாதிக்க முயல்கிறார்கள்!

கேரளமும், தமிழகமும் ஒன்றுபட்டால் நமக்குத்தான் நன்மையாம்; அரசியல்தலைமைப் பதவி அப்போதும் தமிழர்களிடம்தான் இருக்குமாம்! ஏழ்மை குறையுமாம்! திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, கோவையின் சில பகுதிகள்—இவைகளுக்கு அதிகமான பாசன வசதிகள் கிடைக்குமாம்! மேற்குத் தொடர்ச்சி மலைகளின் நீரையெல்லாம் பயன்படுத்த பழந் தமிழ் வழங்கும் சிற்றூர்களிலெல்லாம் மின் விளக்கையேற்றி வைக்கலாமாம்!

—இப்படியெல்லாம் ஆசை காட்டுகிறார் அமைச்சர்!

தமிழகத்தில் ஏழ்மை குறைய இது ஒன்றுதான் வழி யென்கிறார் — பயங்கரத் தேவதைகளின்மேல் ஆணையிட்டு, வயிறு வளர்ப்போர் வாய்ச் சொல் ஆற்றுப் தோரணையில்!

★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

காமராசரின் 'கைவண்ணம்'?

ஆட்டக் காவடி

"ஆட்டக் காவடி என்றால் பக்திக் காவடி அல்ல! பக்திக்காவடி எடுத்து பிரார்த்தனை செலுத்துகிறார்களே; அவர்களுக்கு முன்னே நடைபெறுகின்ற காவடி ஆட்டக் கச்சேரி—அவ்வளவுதான்! ஆட்டக் காவடி எடுத்து ஆடுகிறவர்கள் பல பேர் ஏழெட்டு குடுக்கை மதுவை உள்ளே செலுத்தியபடி ஆடிக் கொண்டேயிருப்பார்கள். பக்திக் காவடி எடுப்பவர்கள் மட்டும் ஒழுங்கோ என்று கேட்கிறாயா? அவர்கள்தான் மதுவைவிட பயங்கரமான பக்திப் போதையில் இருக்கிறார்களே; அதனால் நான் சொல்வதைக் கேள் கனிமொழி! நான் நடத்தப்போகும் ஆட்டக் காவடி கச்சேரி, பக்தியின் பாற்பட்டதல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்! கழுத்திலே காவடியிருக்கும் அவ்வளவுதான்—கருத்திலேயும் ஆண்டவனின் சேவடியிருக்கும் என்று நினைத்து விடாதே! அந்த மூடநம்பிக்கை போதை—என் எதிரே அலகு குத்திக்கொண்டு பால் சொம்பு கட்டிய காவடியை சுமந்து வருவார்களே; அந்தப் பக்தர்களிடத்திலேதான் இருக்கும். என் காவடியில் 'பாவலா' இருக்குமே தவிர பால் இருக்காது! ஆட்டக்கலை இருக்கும்—அறிவுக் கொலை இருக்காது! மயில் தோகை, காவடியின் முன்னே இருக்கும்—மங்கை உன் நினைவுதான் மனதில் இருக்குமே தவிர மயிலேறும் முருகனைப் பற்றிய மடமைக் கனவு இருக்காது!—உத்திரவு கொடு என் தங்கமே! நூறு ரூபாய் தருவதாகச் சொல்லுகிறார்கள்—நாளெல்லாம் பாடுபட்டாலும் நாலைந்து மாதம் சேர்ந்தாற்போல் உழைத்தாலும் முழுசாகக் காண முடியாத பணம்! நூறு ரூபாய்! பழனிக்குப் போய் அங்கே ஆடினால், புதிய கிராக்கிகள் கிடைத்தாலும் கிடைக்கலாம். உத்தேசமாக இரண்டு மூன்று கிராக்கி கிடைத்தால் போதும்—முன்னூறு ரூபாயாவது மிச்சப்படுத்திக் கொண்டு வருவேன். அனுமதி கொடு கனிமொழி! நாளைக் காலையிலே புறப்பட வேண்டும்-பிரார்த்தனைக்காரர்கள் பெரிய பணக்காரர்கள். அவர்களிடத்திலே வாக்களித்து விட்டு வந்துவிட்டேன், நிச்சயம் வருவதாக! தடை சொல்லாதே தங்கம்—அவர்களை ஏமாற்றி விட்டால், அவர்களுக்கு வேறு ஆட்டக் காவடிக் காரன் கிடைக்க மாட்டான். சாகிறவரையில் என்னை சபித்துக் கொண்டேயிருப்பார்கள்! —சரி என்று சொல்லு!—எங்கே?... எங்கே?......என்னைப் பார்! சரியென்று சொல்லமாட்டாய்?..."

கனிமொழியின் முகத்தை ஆவலோடு நோக்கியவாறு கெஞ்சுந் தோரணையில் கந்தன் பேசிக் கொண்டேயிருந்தான். கனிமொழியின் கண்கள் கலங்கியிருந்தன. அவள் அவனைப் பார்த்தாள் அனுதாபத்தோடு!

"பண ஆசைதானே உங்களை இப்படியெல்லாம் பேசச் செய்கிறது! உடலிலே வலுவிருக்கிறது—உழைக்கக் கை கால்கள் இருக்கின்றன. கடவுள் சன்னிதானத்திற்குக் காவடி எடுப்பவர்களுக்குக் காவடி ஆடி, நூறு ரூபாய் சம்பாதிப்பதைவிட, கைத்தறி வேலையிலே கிடைக்கிற பத்து ரூபாய் இருபது ரூபாய் எவ்வளவோ உயர்ந்தது அத்தான்! வேண்டாம், நான் சொல்வதைக் கேளுங்கள்—பக்கத்து வீட்டுக்காரர்கள் பரிகாசம் செய்வார்கள்! "சாமி இல்லை பூதம் இல்லை என்று சொல்லி திருக்குறள் திருமணம் செய்து கொண்டான் திருக்குறள் திருமணம்; அவன் இப்போது ஆட்டக்காவடி எடுத்து ஆடப்போகிறானாம்" என்று ஊரார் கை கொட்டி சிரிப்பார்கள் அத்தான்!" என அழுதாள் கனிமொழி.

"ஆட்டக்காவடி என்றால் அர்த்தம் தெரியாதவர்கள்தான் சிரிப்பார்கள்! —இது ஒரு நடனம் போலத்தான்"

"நடனம் என்றால் அந்த ஆட்டக் காவடி நடனத்தை ஒரு மேடையில் ஆடிக் காட்டுங்கள்! பழனிக்கு காவடி தூக்கும் பக்தர்களுக்கு முன்னால் தானா ஆடவேண்டும்?"

"பணம் வருகிறதே—பணம்!"

"மானம் போகிறதே—மானம்!"

"கனிமொழி! உனக்கு எத்தனை தடவை சொல்லிவிட்டேன்; நான் ஆடுவது ஆட்டக் காவடி—அவர்கள் தூக்குவது பக்திக் காவடியென்று!"

"அவர்கள் தனியாக ஆடட்டும் பக்திக் காவடி! நீங்கள் வேறொரு நாளைக்கு ஆட்டக் காவடி ஆடுங்கள்! உங்கள் கலைத்திறமையைக் காட்டுங்கள்—யார் வேண்டாமென்றது? இரண்டும் ஒரே நேரத்தில் வேண்டாம் — இழிவும் பழியும் வந்து சேரும்! உங்கள் ஆட்டக் காவடித் திறமையைக்காட்ட நானே ஏற்பாடு செய்கிறேன் ஒரு நாள் — ஊர் மக்களைக் கூட்டுவோம் — அவர்கள் எதிரே உங்கள் கலைத் திறமையைப் பொழியுங்கள் — அதைக் கண்டு களிக்கிறேன் நான் — அதைவிட்டு காசுக்காக, மாசு ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம்."

"பைத்தியக்காரி! நூறு ரூபாய் சாமான்யமா?"

"எதற்கு நூறு ரூபாய் இப்போது? — நானென்ன உங்களை ஜரிகைப் புடவையும், தங்க நகையும் கேட்டுத் துன்புறுத்திக் கொண்டா இருக்கிறேன் — குடிக்கக் கஞ்சி போதும் — குடியிருக்க உங்கள் நெஞ்சு போதும் எனக்கு!"

"கனிமொழி!...நீ என்ன சொன்னாலும் சரி; நாளைக்கு நான் பழனிக்குப் போய்தான் திருவேன்—முடிவை மாற்றவே முடியாது!"

என்று வேகமாக எழுந்தான் கந்தன். அவன் கையைப் பிடித்து கனிமொழி நிறுத்தியபடி,

"நன்றாக யோசித்துப் பாருங்கள். ஊர் கேலி செய்யும்—உங்களையே வட்ட மிட்டுக் கொண்டிருக்கும் உயிர்த் தோழர்கள் எல்லாம் ஊரார் முகத்தில் விழிக்க முடியாதபடி அவமானத்தால் தலையைக் குனிந்து நடக்க நேரிடும் — நண்பர்களை உத்தேசித்தாவது இந்த மு... மாற்றிக் கொள்ளுங்கள்!"

"சரி! ஒரே முறை! அனு... கொடுத்துவிடு!—இனியே... வில்லை!"

"ஒரே முறை விஷம் ... அனுமதி கொடுக்க முடியுமா!"

"கனிமொழி! குற்றம் செய்... என்பது தெரிகிறது—தெரிந்... சில நேரங்களில் செய்துதா... வேண்டியிருக்கிறது!"

"முன்னொரு காலத்தில் ... காவடி நிபுணரா யிருந்தீ... அதையே தொடர்ந்து ... கொண்டிருந்தால்—பழனிக்கு... மல்ல; திருச்செந்தூர், திருத்... எட்க்குடி—கதிர்காமம் வரை... கூட செல்லலாம்—இடையிலே... தறிவு புரியிலே நுழைந்து விட்... அத்தான்—அதை சற்று எ... பாருங்கள்! தெரிந்த குற்ற... பிறகு செய்ய மாட்டீர்கள்."

கந்தன் அசைவற்று ... கொண்டேயிருந்தான். கனி... யின் கண்கள் அவனையே நோ... படியிருந்தன. அவளது எ... களோ கடந்த கால ஏடு... தொட்டுப் பார்த்துக் கொண்... தன.

★

கனி மொழி, நெசவாளிப்... உதயமான நீல நிலவு. ... தந்தை நெல்லையப்பர் பழுத்த... தறிவுவாதி, ஒரே மகளை செல்... மட்டுமின்றி, சிந்தனைத் தோ... வும் வளர்த்து வந்தார். ... காட்டு நடையுடை பாவனைகளி... பகுத்தறிவுப் பெட்டகமா... விளங்கிடும் முதல் பெ... கனிமொழியாகத்தான் இ... வேண்டுமென்று நெல்லை... பெருமையோடு கூறிக் கொ... கனிமொழி குழந்தை முதலே... தறிவுப் பாடசாலையின் மாண... மாறிவிட்டாள். தீபாவளி ... வெல்லாம் ரகளைப்படும்—... மத்தாப்புக்கள்—வானவில்லை... நிறங் காட்டும் வாண வகை... அவைகளை யெல்லாம் திரும்பி... பார்க்க மாட்டாள். அப்பா ... தந்த "தீபாவளி கொண்டாட... என்ற புத்தகத்தை வா... உட்கார்ந்து கொண்டு ... படிப்பாள். தெருப் பிள்ளை...

'ஏழை இந்தியா'...



கடந்த சில மாதங்களாக ஏழை இந்தியாவின் பிரதமர் நேருவின் அழைப்பிற்கிணங்கி எறும்பு வரிசையைப்போல் பாரதத்தில்...
(4) இந்தோனேஷிய நாட்டு 'ஹட்டா' (5) இத்தாலி நாட்டு அமைச்சர் (6) நேப்பாள் நாட்டு மன்னர் (7) சவூதி...

ருத்தும், சீன வெடிகளோடு
டி போடும் இந்த சிங்கார
டமூப்பும் சிந்தனை முழக்கம்!

ாமவார விரதம்—மாரி காளி
கை-திரௌபதியம்மன் தீமிதி
வம்—இப்படியெல்லாம் மன
கவரும் திருவிழாக்கள் வரும்—
தும்—கனிமொழியோ, அந்தக்
ாமத்தில் இருந்தபடியே—
யத்துப் புதுமைகளைப் பற்றி
ணிப் பெருமூச்சு விட்டுக்
ண்டிருப்பாள். கனிமொழி —
மரமாளுள். அந்தக் கன்னியைத்
யே விட்டுவிட்டு தந்தை கால
ர். தாயற்ற அவள் இப்போது
தைப் பட்டத்துக் குரியவளா
அவளது வாழ்க்கை எப்படி
படித் திரும்பப் போகிறதோ
து பற்றி ஊரார் ஆருடம்
த்துக் கொண்டிருந்தனர். அந்த
த்தில்தான் அவள் வீட்டு வாச
பம்பை, மேள வாத்திய ஒலி
து.

போதும் இதுபோன்ற நிகழ்ச்
அலட்சியம் செய்துவிடும்
அன்றைக்கு ஏனே தெருப்
திரும்பிப் பார்த்தாள். பார்த்
கண்களைத் திரும்ப எடுக்க
ாமல் திணறிப் போனாள்.
க் காவடி ஆட்டம்! அதிரூப
ன் ஒருவன்-அழகும் இளமை
தேங்கிய உருவினன்-குன்ற
தனது நெடுந்தோளில் ஆட்டக்
டியை சுமந்திருந்தான்.

மூச்சியூட்டும் பம்பை முழக்கம்—
கேற்றாற் போல அவன் ஆடும்
பு நிறைந்த ஆட்டம்—" ஆகா—
ான வாலிபன் — அற்புதமான
" என்று தனக்குள்ளேயே
ரா பேசியது போலிருந்தது
ளுக்கு! கண்களை சிறிது திருப்
ள்-திடுக்கிட்டாள்—அந்த ஊர்
சுதார் மிருகண்டு முதலியார்,
ரது தர்மபத்தினி, பட்டணத்துக்
ாரியில் படிக்கும் அவரது
—மூவரும் நெற்றியிலே அலகு
க் குத்திக் கொண்டு, பக்திப்
மான பாற் காவடிகளை சுமந்த
ின்றார்கள். இப்போது கனி
ழிக்கு ஆட்டக் காவடி கலையும்
றுத்துவிட்டது.

டப்பாவிகளே - அருமையான
—இதை விழலுக் கிரைக்கும்
க்குகிறார்களே — சந்தனத்தை
சாக்கடை நீரில் குழைத்துத் தருகி
றார்களே-பாலோடு விஷம் கலந்தா
லும்-விஷத்தோடு பால் கலந்தாலும்
இரண்டும் ஒன்றுதானே-என்றெல்
லாம் எண்ணியபடி வாயிற்படியில்
வியப்போடும் விசாரத்தோடும்
நின்றுகொண்டிருந்தாள். மிராசுதார்
மிருகண்டுவின் பார்வை மட்டும்
கனிமொழியின் பக்கம் திரும்ப
ஆரம்பித்தது. தோளிலே காவடி!
மனதிலே கனிமொழி மந்திரம்!
அத்துணை பக்திப் பூர்வமாக நின்று
கொண்டிருந்தார் பண்ணை!

"ஊரதிர ஆடுகிறானே; காவடி
ஆட்டம்-அவன்தான் கந்தன்"
என்று அடுத்த வீட்டுக்காரி கனி
மொழியிடம் கூறினாள். குழப்பம்
உந்தித் தள்ள கனிமொழி வீட்டுக்
குள்ளே போய் விட்டாள்.

மிருகண்டு முதலியாரும் காவடி
யுடன் நகர்ந்தார், கனிமொழியின்
வீட்டுக் கதவைப் பார்த்தபடி!

பம்பை ஒலிகள் சிறிது சிறிதாகத்
தேய்ந்து மறைந்தன. கனிமொழி
யின் இருதயத்திலே மட்டும்
எங்கேயோ ஒரு மூலையில் ஏதோ
ஒரு ஒலி ஈனஸ்தாயியில் ஒலித்துக்
கொண்டிருந்தது.

★

ஒரு நாள் இரவு கதவு தட்டும்
சப்தம் கேட்டு, கனிமொழி திறந்
தாள். மிராசுதார் மிருகண்டு முதலி
யார் மளமளவென்று வீட்டுக்
குள்ளே நுழைந்தார். கதவை
அவரே தாளிட்டார்.

காரணத்தை விளக்கவா வேண்
டும்? கனி யிருக்கிறது-வௌவால்
பறந்து வந்துவிட்டது!

"யாரடா நீ—அன்று நெற்றியிலே
அலகு குத்திக் கொண்டு பக்தி
ததும்ப காவடி எடுக்க கண்யவானு
நீ?" கனிமொழி நெருப்பானாள்!

"ஆமாம் கிளியே! அந்த அலகு
வெள்ளி அலகு! கிள்ளை நீ உன்
அலகால் என் கன்னத்தை வருடு!"
என்று கை தொட்டார் மிராசுதார்.

கனிமொழி—பகுத்தறிவுப் பெண்
ணன்றோ! கண்ணகி சரிதம் படித்த
வளன்றோ — அவள் கை விளை
யாடிற்று, பண்ணையாரின் கன்னங்
களிலே! இருந்தாலும் வெறி பிடித்த
வேங்கை—வெறி பிறழா மான்குட்டி
—ஆபத்து நெருங்கிவிட்டது—கூக்
குரல் — கூச்சல் — அபயங்கேட்கும்
அபாய அறிவிப்பு—அந்தக் குடிசை
யிலே யிருந்து கிளம்பிற்று. அப்
போது அங்கே வந்து குதித்தான்
ஆட்டக் காவடி கந்தன். மிருகண்டு
மிரண்டார். கந்தனின் கால்களில்
மிதியுண்டார். கனிமொழி தப்பி
னாள். கதைகளிலே கதாநாயகிக்கு
ஆபத்து வருவதும், கதாநாயகன்
காப்பாற்ற வருவதும்—பின் காதல்
உதயமாவதும் வழக்கமாகி விட்ட
தைப்போலவே, கனிமொழியின்
வாழ்க்கையிலும் அப்படி ஒரு உண்
மைச் சம்பவம் எதிர்பாராமல் நடந்து
விட்டது. கந்தனும், கனிமொழியும்
வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்
குவதற்கு, அவள் விதித்த நிபந்தனை
கள் ஏராளம்.

அவைகளிலே ஒன்றுதான்,
அவன் ஆலயங்களுக்கு ஆட்டக்
காவடி ஆடுவதை நிறுத்த வேண்டு
மென்பது! ஒத்துக் கொள்ளாமல்
இருப்பானா?—ஆட்டக்காவடி நிறுத்
தப்பட்டது — அவனுக்கு அவள்
அறிவு ஆசானாக ஆனாள். கந்தனும்
கனிமொழியானான். அதன் பிறகே
இருவருக்கும் திருமணம். ஊரே
ஆச்சரியத்தில் மூழ்கியது. கந்தனின்
வழியிலே பல காளையர் நடை
போடத் தொடங்கினர். கந்தன்
அந்த ஊர் வாலிபர்களுக்கு இளந்
தலைவனானான். கனிமொழியோ
ஆனந்தக் கடலில் ஒளி விட்டுப்
புறப்படும் பூரணமதியம்போல்
முகங்காட்டிப் பூரித்தாள். காவடிக்
கந்தன் கைத்தறிக் கந்தனானான்.
கைத்தறியிலே வந்த பணம் அவன்
தாராள செலவுகளுக்குப் போத
வில்லைதான்! கஷ்டப்பட்டான். ஆனா
லும் கனிமொழியின் மனதிற்கு
விரோதமாக நடப்பதற்கு பயப்பட்
டான். மிராசுதார் மிருகண்டுவின்
மகன்—பீதாம்பரத்தின் மூளை வேலை
செய்தது. ஊரிலே எழுந்துள்ள
கொள்கைக் கோட்டையைத் தவிடு
பொடியாக்கக் கருதினான். கந்தனின்
நண்பனானான். காசின் அருமை
பெருமைகளைப் பற்றி அடிக்கடி உப
தேசித்தான் கந்தனுக்கு! கந்தனின்
கொள்கைகளை ஏற்றுக்கொண்டு,
அவைகளுக்குத் திருத்தங்கள் சில
தருவதுபோல நடித்தான். அப்படி
அவன் தந்த திருத்தங்களிலே ஒன்று
தான் பழனிக்கு ஆட்டக் காவடி
எடுக்கலாம் என்பது!

★

கந்தன், அந்தத் திருத்தத்திற்கு
விளக்கம் கொடுக்க, கனிமொழி
கற்சிலையாக நின்று கொண்டிருந்
தாள் அன்றிரவு.

நின்று கொண்டிருந்த கந்தன்,
திடீரென அதைவிட்டு வேகமாக
அகன்றான்.

மறுநாள் அவனது பழனிப்பயணம்
ஆரம்பமாயிற்று, ஆட்டக் காவடி
ஆட்டமும் பழனித் தெருக்களிலே
பிரமாதமாக நடைபெற்றது. அவன்
எதிர்பார்த்தபடியே அங்கேயே
அவனுக்கு மூன்று நான்கு கிராக்கி
கள் மோதின. முன்னூறு ரூபாய்
கிடைத்தது. எடுத்துக் கொண்டு
ஊருக்குத் திரும்பினான். பணத்தைக்
காட்டி, கனிமொழியின் கோபத்தைப்
போக்கி விடலாம் என்ற பூரண
நம்பிக்கையோடு வீட்டுக்குள்
நுழைந்தான். அங்கே கனிமொழி
இல்லை. அந்தப் பகுத்தறிவுச் சிட்டு
எங்கேயோ பறந்துவிட்டது. கட்டில்
மேலே ஒரு காகிதச் சுருள் கிடந்தது.

அதை எடுத்துப் பிரித்துப் பார்த்
தான்.

**"பொது வாழ்க்கை என்பது
கரும்பைச் சுவைப்பது போல
அல்ல; கரும்பைக் கைகளால்
தடவுவது போல!**

**தடவிப் பார்த்தால்தான் தெரியும்;
கைமுழுதும் 'சுணை'கள் குத்திக்
கொள்ளும்.**

**உங்களுடைய முடிவுக்குப் பிறகு,
நான் மேற்கொள்ள வேண்டிய
முடிவுகள் இரண்டேதான்!**

**ஒன்று விஷம்—
மற்றொன்று விவாக ரத்து!**

**இதில் எதைத் தேர்ந்தெடுப்ப
தென்று புரியாமல் உலகத்தில்
எங்கேயோ ஒரு மூலையில்
திரிந்து கொண்டிருக்கிறேன்.**

**இப்படிக்கு,
கனிமொழி,
பகுத்தறிவுப் பெண்.**

கடிதத்தைப் படித்து முடித்தான்
கந்தன். கண்களிலே 'அலகு'
சொருகப் பட்டதுபோல் துடித்துக்
கீழே விழுந்து மூர்ச்சையானான்.

★

ந்தாளி வரிசை!

ருக்கும் விருந்தாளிகள் : (1) ஆஸ்திரேலியா நாட்டு 'கேசி' (2) பர்மிய நாட்டு 'நூ' (3) கானடா நாட்டு 'பியர்சன்'
மன்னர் (8) ருஷ்ய நாட்டு புல்கானின் (9) குருஷேவ் (10) இப்போது ஈரான் நாட்டு மன்னரும் அவரது மனைவியாரும்.

★ உரிமை வேறு, உறவு வேறு! ★

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

நேரு பெருமான், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவராம்! புரட்டுசகு வாதாடக்கிளம்பிஇருக்கிறார் இந்தப் புது வக்கீல்!

நேருவின் ஜனநாயகம், இங்கல்ல; விந்தியத்திற்கு வடக்கிலேயே எள்ளி நகையாடப் படுகிறது; இந்திய அரங்கில் பண்டிதருக்கிருந்த தனிப்பட்ட மரியாதை கூட எந்த அளவிற்கு சரிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, மாற்று முகாமிலே இருக்கும் நமக்கே அனுதாபம் ஏற்படுகிறது!

பக்தவத்சலனார் சொல்லுகிறார், வேறெந்த ஜனநாயக நாட்டிலும், பிப்ரவரி 20-ஐ அனுமதித்திருக்க மாட்டார்களாம்!

கிரெம்ளின் மாளிகையிலே உலவிக் கொண்டிருக்கும், அரசியல் மேதை என்ற எண்ணமோ என்னவோ - நாமறியோம்! மக்களால் செலலாக்காசாக்கப்பட்டு, 'எங்கிருக்கிறாய் அமைச்சரே!' என்று கேட்பதற்கும் நாதியில்லாமல் கிடக்கும் இந்த திருவாளர்தான், உலக நாடுகளை, இந்த ஓட்டை சர்க்காருக்கு, சாட்சி சொல்ல இழுக்கிறார்!

நாம் பேசும் கூட்டங்களில் மூவேந்தராண்ட நாடு இது எனகிறோமாம்! சேர, சோழ, பாண்டியர்கள ஆண்டார்களா?—என்பதிலே கூட இந்த அமைச்சர் பெருந்தகைக்கு சந்தேகம் வந்து விட்டது!

ஆண்டதாகச் சொல்கிறோமாம் நாம! அதுகூடத் தெரியவுலலை, இவருக்கு!

அந்தோ அமைச்சரே! உங்கள் தமிழ் உணர்ச்சியில் இவ்வளவு பயஙகரமான வரட்சி ஏற்படுமெனறு நாடு நினைத்துக்கூட பார்ககவிலலையே!

சந்தேகம் வேண்டாம் அமைச்சரே! சந்தேகம் வேண்டாம்! கொண்ட கொள்கையைக குழி தோண்டிப் புதைககாத, கோலேந்திகள் ஆணட பூமதான இது! மாசற்ற மூவேந்தா வாழ்ந்த நாடு தான இது! அந்த ஏசாச சிறப்பின், இலச வளஙகு பெருங்குடியினா விட்டுசசெனற மண்ணில் தான், உடமையைப பறிகொடுத்தும், உணர்ச்சியைச சாகடிததும், ஊமையென — ஆமையென சுருண்டுகிடக்கும் 'பக்தவத்சலங்கள' முளைததுவட்டனர் என்று, இளைஞா உலகு-குறிபபாக மாணவா சமுதாயம் குரலெழுபபுவது நம் செவிகளைத் தொடாமல் இல்லை.

'சேரனும், சோழனும், திருவாங்கூர் மணணிலே ஆடசி செலுத்தினராம்' அதறகாக தேவிகுளம், பீரமேட்டை விட்டுவிட வேண்டுமாம்; எபபடி இருக்கிறது இந்த 'மதியூகி'யின் பரநத கண்ணோட்டம்! திருவாங்கூர் சீமையில் மட்டும்தானா மூவேந்தர் கொடி பறந்தது? இமயத்தின் முதுகை வளைத்து அதன்மேல் காலூன்றி கம்பீரமாகநின்றானே முதல் தமிழன்-அவன் கையிலேகூடத்தான் தமிழ்கொடி பறந்தது!

ஒரு காலத்தில் ஆண்டோம் என்பதற்காக உரிமையை விட்டுக் கொடுப்பது நியாயம் என்றால்—

ஒரு காலத்தில் தனியாட்சி நடத்தினோம், இன்றேன் இங்கு தருக்கர் தலையீடு எனறு தட்டிக் கேட்பதும் எப்படிக் குற்றமாகும்?

தேவிகுளம் — பீர்மேடு எங்கு போய்விட்டது? கேட்கிறார், அமைச்சர்!

தேவிகுளமும் — பீர்மேடும் 'பறக்கும் தட்டு'களல்ல, பறந்து போய் பார்மோசாவுக்குப் பக்கத்திலே விழுந்துவிட;என்பது பக்தவத்சலனாரைவிட நமக்குத் தெளிவாகத் தெரியும்;

'வந்தே மாதரம், எமதே ராஜ்யம்' என்று இவர்கள் வீதிக்கு வீதி கூப்பாடு போட்டபோது, அந்த உரிமை முழக்கத்தை— 'ஓலம்' என்று கூறவில்லை; காட்டுக் கூச்சல் என்று குறிப்பிடவில்லை யாரும்! 'எமதே ராஜ்யம்' எனறு ஏனய்யாவாய்கிழியககத்துகிறீர்கள் 'எங்கே போய்விட்டது உங்கள் ராஜ்யம்—பாயாகச் சுருட்டிக்கொண்டு பசிப்பிக் கடலிலா புகுந்துகொண்டான் வெள்ளையன' என எவரும் வினா எழுப்பவில்லை!

★

உரிமை வேறு!

உறவு வேறு!

ஒரு குவளைக்காக, பாகப் பிரிவினையின்போது. குத்து வெட்டு நடத்தும் சகோதரச் சண்டையில் உறவைக்கூட முறித்து விடுகிறது உரிமை.

இந்த சாதாரண உண்மையைக் கூட புரிந்துகொள்ளாத அமைச்சர்தான், பனப்பாக்கத்திலே (சிறு கிராமம்) நின்றுகொண்டு அறை கூவல் விட்டிருக்கிறார்.

வெள்ளையனைக் கண்டே பயப்படாதவராம் இவர்! இவர்கள் மிரட்டலுக்கா பயப்படப் போகிறோம் என்று 'அடாணா' பாடி இருக்கிறார்; ஆச்சரியப்படாதீர்கள் 'நம்ம' பக்தவத்சலனார்தான்!

'கள்ளன் புகுந்து விட்டான்; அவன் கையிலே கொடுவாள்; கண்ணாளா ஓடி வாருங்கள்' என்று மனைவி கூக்குரலிட, 'பைத்தியமே, இவனென்ன பெரிய திருடன; பயங்கரக்கொள்ளைக்காரன் பக்கிரிசாமிக்கே நான் பயப்படவில்லை! ஓடு, ஓடு! கையிலே தடி எடு; விடாமல் தாக்கு! நான் இங்கிருந்தே கவனித்துக் கொள்ளுகிறேன்!" என்று கூறிய அதி வீரனான அந்தக் 'கணவனின்' கதைதான், நம் நினைவிற்கு வருகிறது, பக்தவத்சலனாரின் நெஞ்சிலே துளிர் விட்டிருக்கும் இந்த 'வீரத்'தை எண்ணும்போது!

வெள்ளையனுக்கே, மார்பைப் பிளந்து காட்டிய மாவீரராம்! நம் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டாராம்! இவ்வளவு பெரிய 'வீரரை' இதுவரை நாம் புரிந்து கொள்ளாதது தவறுதான்; நாமெல்லாம் கூடி மிரட்டுகிற அளவிற்கு, அப்படி என்ன 'உயரத்தில்' இவர் இருக்கிறாரோ நமக்குத் தெரியவில்லை! ஏன்? இவர் போன்றவர் நினைவே போராட்ட காலங்களில் நமக்கெல்லாம் இருப்பதில்லையே!

நம் எதிர்ப்பெல்லாம், இங்கிருக்கும் 'சுண்டைக்காய்' அமைச்சரவையை நோக்கியல்ல, வட நாட்டு முரட்டு சர்க்காரை எதிர்த்துதான் நாம் போர்க்கொடியை உயர்த்திப் பிடித்திருக்கிறோம்; இது தெரிந்தும்கூட, விட்டில் பூச்சிகளென வலியவந்து விழுகிறார்கள்; வேண்டாத கருத்துக்களை, வீண் வார்த்தைகளை உதிர்த்து, உரிமைக்குரல் எழுப்புவோர்க்கு முன்னால் உதிர்ந்த சருகாகி விடுகின்றனர்.

வெள்ளையனுக்கு மார் காட்டி நின்ற இந்த 'நெப்போலியன்' தேவிகுளம் பீர்மேடு பறிபோன போது, எந்த மூலையிலே ஒளிந்து கொண்டிருந்தார்; வெள்ளையனை எதிர்க்கும்போது இருந்த வீரம், தமிழர்களின் உரிமை பரிபோன போது எங்கே போயிருந்தது? என்ன செய்து கொண்டிருந்தது! கேட்கவில்லை நாம்; நாடு காத்திருககிறது: வரப்போகும் தேர்தலின்போது கேட்பதற்கு!

வீதிக்கு வீதி மின்சார விளக்கை ஏற்றி வைக்கச்சென்ற இந்த திருவாளர், ஊருக்கு உபதேசம் செய்வதற்கு முன்னால் இருண்டுபோய் கிடக்கும் தன் சிந்தனை வீதியில் அறிவு விளக்கினை ஏற்றி வைத்திட முன் வருவாரா?

பொதுமக்கள் ஆதரவு இல்லையாம்! அம்மவோ? பொதுத்தேர்தலுக்கும் — கூட்டணிக்கும் பாலம் அமைத்துப் பார்த்து, அதிர்ச்சியடைந்திருக்கிறார் 'அமைச்சர்!' அந்த அதிர்ச்சியின் 'விஸ்வரூபம்' தான் ஆத்திரத்திற்கு வித்திட்டிருக்கிறது. ஏதேதோ வினா எழுப்புகிறார், என்ன பேசுவதென்றே தெரியாமல்! இதற்கெல்லாம் விடை 'தேர்தலே நீ வேகமாய் வா!' என்பதைத் தவிர வேறென்ன கூற முடியும் நம்மால்!

—வில்வம்.

'பாலம்' கட்டுகிறார்!

பழமைக்கும் புதுமைக்கும் பாலம் கட்டுவதிலே சிலருக்கு அலாதியான மகிழ்சசி; இந்த திருத் தொண்டிலே உலகத்தை அறிந்திருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் சிலரும் இடம் பெற்றிருப்பதுதான் நமக்கெல்லாம் வேடிக்கையாக இருக்கிறது:

'போகும்போது எப்படியிருந்தான்! ஏன் செத்தான் தெரியுமா? அவன் புறபபடும்போது பூனை ஒன்று குறுக்கே ஓடியது.'

'சாகிற உடம்பா அவனுக்கு; அந்த பொல்லாத விதவை, அவன் புறப்படும்போது எதிரே வந்தாள்; முடிந்தது அவன் வாழ்வு; மோட்டாரிலே சிக்கி நசுங்கிச் செத்தான்; பாவம்;'

இப்படி தற்செயலாக ஏற்படும் சம்பவங்களுக்கும், குருட்டு நம்பிககைக்கும் இணைப்பு ஏற்படுத்தி வைப்பவர்களை நாம் தினம் தினம் சந்திககிறோம்;

காக்கை உடகாரப்பனம் பழம் விழுந்தது என்பதைப் போல சிந்தனையை செலவழிக்க வேண்டிய இடங்களில் மட்டும், "எவ்வழி பெரியோர், அவ்வழி நானும்!" என்று அறிவுக் கதவுகளை மூடிக் கொள்ளுகிறார்கள்,

மாநில சீரமைபபு காரணமாக, இந்திய உபகண்டமெங்கும்' குழப்பங்களும். கலவரங்களும் கொந்தளிப்பும் உருவாயிறறு அல்லவா! அதற்கு காரணம் என்ன? சீரமைப்புக் குழுவினரின் தவறு! நேரு பணடிதரின் ஏதேச்சாதிகாரப் போக்கு! மக்கள் குரலுக்கு செவி சாயக்காத சர்க்காரின திமிர்வாதம்!

இப்படிப் பலப் பல காரணங்களைக் காட்ட முடியுமல்லவா? ஆனால் மக்கள் சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஒருவர் இதற்கு ஒரு விசித்திர வியாக்கியானம் சொல்லி நம்மை யெல்லாம சிரிகக வைககிறார்!

"ஆண்மையில் ஏற்பட்ட சூரிய கிரகணத்தின் தீய விளைவுகளே நாட்டில் ஏற்பட்டுள்ள மாநில புனரமைப்புக் கலவரங்களுக்கெல்லாம் காரணம்! சென்ற ஆண்டு சூரிய கிரகணத்தின் போதுதான் இந்தப் பிரச்சனையை மக்கள்சபை விவாதிக்கத் தொடங்கியது; போதாக் குறைக்கு, அது சம்மந்தமான சட்ட திருத்த மசோதா விவகாரங்கள் சந்திர கிரகணத்தன்றுதான் தொடங்கப பட்டது; இந்த இரு காரணங்கள்தான் நாட்டிலே கொந்தளிப்பை உண்டாககி இருக்கிறது!"

சர்க்காரின 'தவறுகளுக்கு' சந்திர சூரிய கிரகணங்கள் தான் காரணமாம்!

சட்ட புத்தகங்களைப் புரட்ட சகுனம் பார்க்கிறார்!
பழமைக்கும் புதுமைக்கும் பாலம் கட்டுகிறார்!
படித்தவரே—இதைச் செய்கிறார்!
பாமரரைப் பற்றி என் சொல்ல?

'பிச்சை' எடுக்கவா பிணைப்பு?

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி.

தமிழகத்திலே செல்வம் பொங்கட்டும்! வறுமை தலை தெறிக்க ஓடி ஒளியட்டும்—நாம் ஆட்சேபிக்கவில்லை!

முதுகிலே சுமை; மூச்சு இழுக்க முடியவில்லை—கசையடிகள் வேறு திரேகத்தைத் தடவிப் பார்க்கின்றன!

—அந்த அடிமை நல்வாழ்வு பெற, கழுத்திலே தொங்கும் அடிமைச் சாசனத்தை உடைத் தெறியுங்கள் என்கிறோம், நாம்!

ஆனால் அமைச்சர் சுப்பிரமணியமோ அடிமை சாசனம் செப்பேட்டில் இருக்கிறது, அதைத் தங்கத் தகட்டிலே செதுக்குங்கள் — என்று கர்ஜனை புரிகிறார்!

ஆமாம் தோழர்களே: கேரளமும், தமிழகமும் இந்திய யூனியனுக்குள் ஒற்றுமைப் பட்டு விட்டாலே விசாரம் குறைந்து விடும்; மிடிமை அகன்றுவிடு மென்கிறார்!

பொன் விலங்குக்கு சிபார்சு செய்யும் சுப்ரமணியனார் இரண்டு மாநிலங்களும் ஒன்றானால் வளம் பொங்கு மென்பதற்கு என்ன காரணம் தெரியுமா காட்டுகிறார்?

"இரண்டாவது5 ஆண்டுத் திட்டத்தில் நான் கூறிய ஏற்பாடுகளெல்லாம் அமுலாக நாம் மத்திய அரசாங்கத்தையும், திட்டக் கமிஷனையும் அணுக வேண்டும். இரண்டாவது திட்டத்திலாவது அவைகள் எடுத்துக் கொள்ளப் பட வேண்டுமானால் இரண்டு மாநிலங்களுக்கும் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைவிட ஐம்பது அல்லது அறுபது கோடி ரூபாய்கள் தேவைப்படும்!"

—எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? குஷ்டரோகம் தீர செங்கற்பட்டு மருத்துவ மனைக்குச் செல்லும் என்று சிபார்சு செய்த டாக்டர்கள், பிறகு கடவுள் அருளால் இந்தக் கொடு நோய் தீர்ந்து விடும் என்று சொல்லி, பத்து நாள் மந்திரம் ஜபித்து மூலிகையையும் கொடுக்க வேண்டுமென்றுகூறும் அசட்டு வாதத்தைப் போல அல்லவா அமைச்சரது வாதம் இருக்கிறது!

தமிழகம் பொன் விளையும் பூமியாக மாற திட்டங்களைக் கூறினார் அமைச்சா—மகிழ்ந்தோம்! தாயகத்தை வாழ்விக்கும் எண்ணங்கூட அந்த இடத்தில் உதயமாகிறதே என்று நாம் களிபேருவகை கொண்டோம்!

—இவையெல்லாம் நிறைவேற வேண்டுமானால் தமிழகமும், கேரளமும் கைகோர்த்துச் செல்ல வேண்டுமென்றார்—அப்போதே தெரிந்துக் கொண்டோம் இது சுப்ரமணியனாரின் சொந்த மூளையிலிருந்து உதயமானதல்ல; ஆச்சாரியார் வழங்கிய இரவல் சரக்கு; என்று!

'செங்கற்பட்டு'க்குப் போகச் சொன்னார்; சரி! எல்லாவற்றையும் கூறிவிட்டு கடவுள் அருள் இருந்தால்தான் காரியம் கைகூடுமென்று ஏன் சொல்ல வேண்டும்?

தமிழகத்தின் நல் வாழ்வுக்கு வழி கூறியவர்—புது உலகப் பிரயாணத்துக்குப் பாதை காட்டியவர், 'டெல்லி'க்குச் சென்ற பிறகுதான் 'டிக்கட்' பெற முடியுமென்றல்லவா மொழிகிறார்!

'தனித்தனியாக ஒவ்வொரு தெருவாய் சுற்றிப் பிச்சையெடுக்க வெட்கமாய் இருக்கிறது; ஓய், கிங்கிணிப் பண்டாரம்! நீயும் வாரும் சேர்ந்து கை நீட்டுவோம்; கிடைத்ததைப் பங்கிட்டுக் கொள்வோம்'' என்று ஆண்டிமடத்தில் நடைபெறும் நிகழ்ச்சியையல்லவா இந்த அமைச்சர் அரசியலில் நடத்திக் காட்ட விரும்புகிறார்!

'சென்னையிலிருந்து நான் தனியாக டில்லி சென்று வந்தேன்; இனி இன்னொரு மேனனையும் துணைக்கு அழைத்துச் செல்ல' வேண்டு மென்றல்லவா சுப்ரமணியம் கூறுகிறார்!

மலையாளத்தோடு சேர்ந்த பிறகும் டில்லிக்குத்தான் காவடி எடுக்க வேண்டுமென்றால், பிறகு எந்தக் காரணத்தைக் கொண்டு அவர் கேரளத்தின் பிணைப்பை விரும்புகிறார்?

இணைந்த பிறகுமட்டு மென்ன; அதிகமாக அவர் கேட்கப் போகும் ஐம்பது அல்லது அறுபது கோடி ரூபாய்களை டெல்லி மூலவர்களிடமிருந்து பெற்று விடவா முடியும்?

விருதை வீரர் காமராசரோடு சென்று. நானூறு கோடி ரூபாய்க்கு வேண்டுதல் விடுத்து இவர்கள் இருநூறு கோடியைத்தானே பெற முடிந்தது!

'இவர்கள் ஒன்று நினைக்க டெல்லி ஒன்றையல்லவா நினைக்கிறது'!

—இந்தக் கேவலமான நிலையில் இணைப்பு வேறு வேண்டும்--என்று கேட்கத் தூண்டும் சூழ்நிலைக்குத்தானே இந்நாட்டவர் கொண்டு வரப்படுகிறார்கள்!

அம்மட்டோ? அமைச்சர் சுப்ரமணியனாரின் பேச்சை இன்னும் கேளுங்கள்:

"இந்தப் புது மாநிலத்தில் தேவையான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட திட்டக் கமிஷன் சில பெரிய தொழிற்சாலைகளை இந்தப் பகுதியிலே அமைக்க சம்மதம் தரவேண்டும்!"

—மறுபடியும் இரு கையேந்துகிறார், இழிநிலைக்கு அஞ்சாத அமைச்சர்!

'வடக்கனு மூர்த்தி'களின் கருணை இருந்தால்தான் தென்னகம் வாழுமென்று மறைமுகமாக ஒப்புதல் தருகிறார் கோவைக் கிழார்!

திட்டக் கமிஷனின் காலில் விழுந்த பிறகுதான் இங்கே வளம் பொங்கி வழியு மென்றால், கேரளத்தின் கூட்டுறவில்லாமலே இந்தக் கோவை

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

குருசாமியார் குரல்!

If the Brahmins have not discarded Brahminism, i. e., their narrow sectarian outlook and joined the Kazhagam for the creation of a separate Dravidanad, it is their own fault. If the Kazhagam has any personal hatred towards the Brahmins as a class, it would not have supported men like Mr. R. S. Sarma, Mr. C. V. Rajagopalachariar and a few other Brahmins (by birth) during the present elections. The Kazhagam's founder and leader, Periyar E.V. Ramasami, is even today one of the best friends of the great Congress leader, Mr. C. Rajagopalachariar.

★

We hate the Brahminism (caste arrogance) among the non-Brahmins, as much as we hate it among the Brahmins. But as Vivekananda said. "the Brahmin must suck out his own poison." Whoever wears any mark or symbol of caste superiority and arrogance— whether he be a Brahmin or a non-Brahmin, he is an enemy of our principles. He is an enemy of equality. He is an enemy of progress.

—S. GURUSWAMI.

General Secretary, Dravidian Federation.

பார்ப்பனர்கள் பார்ப்பனியத்தை, அதாவது குறுகிய மனப்பான்மையை; விட்டு விட்டு தனித்திராவிடநாடு பிரிவதற்கு கழகத்தில், சேரவில்லை என்றால் அது அவர்களுடைய சொந்தக் குற்றம்தான்! கழகத்திற்கு பார்ப்பனர்கள் என்ற வகுப்பாரிடம் தனிப்பட்ட வெறுப்பு இருக்குமானால், அது தோழர் ஆர். எஸ், சர்மா, தோழர் சி, வி. ராஜகோபாலாச்சாரியார் போன்ற பிறப்பால் பார்ப்பனராய் இருப்போரை ஆதரித்திருக்காது. கழகத்தின் ஸ்தாபகரும், தலைவருமான பெரியார் ஈ. வெ. ராமசாமி இன்று கூட பெரிய காங்கிரஸ் தலைவரான தோழர் சி. இராஜகோபாலாச்சாரியின் நெருங்கிய நண்பர்களுள் ஒருவராவார்.

★

நாங்கள் பார்ப்பனியத்தை (ஜாதித் திமிரை) பார்ப்பனரல்லாதாரிடத்தில் இருந்தால் கூட. அது பார்ப்பனர்களிடத்தில் இருந்தால் எப்படிக் கருதுவோமோ அதைப் போலவே வெறுக்கிறோம். விவேகானந்தர் சொன்னது போல 'பார்ப்பான் தன்னுடைய விஷத்தைத் தானே நீக்கிக்கொள்ள வேண்டும்.' பார்ப்பனனாயிருந்தாலும் சரி, பார்ப்பனரல்லாதானாய் இருந்தாலும் சரி. இவர்களில் யாராவது ஜாதி மேம்பாட்டையும், ஜாதித்திமிரையும் குறிக்கும் சின்னங்களையோ, குறிகளையோ அணிவார்களேயானால் அவன் எங்கள் கொள்கையின் விரோதி, அவன் சமத்துவத்தின் எதிரி. அவன் முன்னேற்றத்தின் எதிரி.

['சுதந்தரா' ஆங்கில வார இதழில் மூன்றாண்டுகளுக்கு முன்பு 'விடுதலை' ஆசிரியர் குருசாமியார் 'யார் வகுப்பு வாதி?' என்ற தலைப்பில் இப்படிக் கடிதம் எழுதியிருக்கிறார்.]

'ரண' சிகிச்சை தேவைதான்!

'பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறள் தந்த கோமானின்—தங்கம் நிகர் கருத்துக்கள் ஒருபுறமும் 'எட்டி நில், எனை நெருங்காதே' என்ற ஜாதி இந்துகளின் திமிர்வாதம் மறு புறமும்; ஒரே காலத்தில் உருவெடுத்தன.

மானிட ஜாதிக்குள் மட்டுமே புகுந்து விட்ட இந்த பயங்கரக் கொடுமையை—அறிவுடையோரெல்லாம்; கண்டித்தனர்; அந்த தீண்டாமையின் கொடிய கரங்களால் அமுத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட, இந்த மண்ணுக்குரியவர்களின் துயர் கண்டு கண்ணீர் வடித்தனர்.

ஆயிரங்காலத்து பயிர் இது—அழித்து விடவா முடியும்? என்று அப்போதும் வரட்டுக் கருத்துக்களை பேசத்தான் செய்தனர் சிலர்; இன்னும் சிலர், வாயளவில் தீண்டாமை குறித்து முழக்கமிட்டு விட்டு, நடைமுறையில், 'தீண்டாதவர்கள்' என்று கருதப்பட்டவர்களைக் கண்டால், அனல்பட்ட புழு வென உடல் நெளிந்தனர்;

இந்நிலையில் சமுதாயத்துறையில் பட்டும் படாமலும், அரசியல் பாட்டையில் சென்று கொண்டிருந்த காங்கிரஸ் ஸ்தாபனமும், அதன் காவலராம் காந்தியடிகளும்கூட; சமுதாயத்திலே மலையென வளர்ந்து நின்ற தீண்டாமை என்ற விஷ விருட்சத்தை வேரோடு கல்லி எறிய பெரிதும் முயன்றனர்!

வேள்விச் சாலைகளிலே இருந்து கிளம்பிய இந்த விஷ மூச்சு, ஒரு மாபெரும் சமுதாயத்தையே நச்சுப் பொய்கையாக்கி, நீசத்தனங்கள் நெளியும் பாசிபடர்ந்த குளமாக்கி விட்டது!

சமுதாயத்தில் பொல்லாதவர்கள் விளைத்து விட்ட அந்த தீண்டாமை, சர்க்கார் சட்டம் போட்டு தடுக்க வேண்டிய அளவிற்கு, முரட்டுத் தன்மை பெற்றிருந்தது;

அக்ரகாரத்திற்கே சொந்தம்; அம்மாமிகளின் வசந்தமாளிகை, என்று கருதப்பட்ட ஆலயங்களின் நெடுங்கதவுகளும் திறந்து விடப்பட்டன;

அப்பொழுதும் ஜாதி இந்துக்களின் இதயக் கதவுகள்—திறக்கப் படவில்லை; வேண்டா வெறுப்போடு சர்க்காரின் சட்டம் கொட்டுமே என்ற பயத்தால்; சம்மதித்தனர்;

உயர் குடித் தோன்றல்கள் என்று கருதிக்கிடந்தவர்கள்; உறுமினர்.

தீண்டாமை சட்டப்படி குற்றமாமே, என்று புருவத்தை நெரித்துப் பேசினர் சிலர்;

சர்க்கார் சுவரொட்டிகள் தீண்டாமை சட்டப்படி குற்றமென்ற விளக்கத்தோடு, வீதிக்கு வீதி ஒட்டப்பட்டன!

இன்றளவும்கூட தீண்டாமையை, முழுமனதோடு வரவேற்காத பார்பன குலத்தைச் சேர்ந்த ஒருவர், ஆதி திராவிடனைப் பார்த்து, 'கிட்டே வராதே எட்டி நில்!' என்று கூறுவது போலவும்-அதன் விளைவாக, அந்த பஞ்ச கச்சம், பூனூல், சகிதம் காட்சி தரும் உருவம் கைது செய்யப்பட்டு சிறைக்குள் தள்ளப்படுவதாகவும், அந்த சர்க்காரின் சுவரொட்டிகள் படப் போட்டுக் காட்டின.

அவ்வளவுதான், எல்லோரும் திரண்டெழுந்தனர், எங்கள் நெஞ்சம் புண்ணாகி விட்டதே என்று ஓலமிட்டனர்; இந்த விலா ஒடிந்த சர்க்கார், உடனே சுவரொட்டிகளை வாபஸ் பெற்றுவிட்டது நினைவிருக்கும்.

'ஒரு வகுப்பாரின் மனம் புண்படுகிறது, அதனால்தான் சுவரொட்டிகளை வாபஸ் பெறுகிறோம்' என்ற ஒரு நொண்டிச் சமாதானத்தையும் தந்தனர்,

ஒரு வகுப்பாரின் மனம் புண்படுகிறதாம்!

'தூர விலகி நில்! நீ தொடக்கூடாதவன்' என்று சொல்லும் போது எத்தனைக் கோடி தாழ்த்தப்பட்டவர்களின் நெஞ்சம் எரிமலையாக மாறும்! எத்தனை இதயங்கள் புண்பட்டிருக்கும்?

பஞ்சகச்சமும், பூனூலும் அணிந்த ஒரு உருவததைப் போட்டால் பூதேவர்களின் நெஞ்சம் புண்பட்டு விடுகிறதாம்!

புகைச்சலைக் கக்குகிறார்கள் தாழ்த்தப்பட்டவர்களிடம் கொண்டுள்ள எரிச்சலைப் போக்கிக் கொள்ள முன் வராமல்!

★

'பஞ்சதந்திரம்' என்ற தலைப்பில் சுதேசமித்திரன் வார ஏடு, தொடர்ச்சியாக ஒரு சித்திர விளககம் போட்டு வருகிறது: பிப்ரவரி 26ம் தேதிய இதழில், 'பொன்னுசைப் பார்ப்பான்!' என்ற தலைப்பில் ஒரு சித்திரம் வெளியாகி இருக்கிறது.

காட்டிலே ஒரு கிழப் புலி, அதற்கு ஒரு பொன்காப்பு கிடைக்கிறதாம்; அந்த நேரத்தில் ஒரு பார்ப்பனன் அவ்வழியே செல்ல—புலியைக் கண்டதும் கிலி கொண்டு ஓட ஆரம்பிக்கிறான்; கிழப்புலி, ஓட முடியாத நிலை; உடனே ஒரு எண்ணம் உதயமாகிறது அந்த கிழப்புலிக்கு — 'பார்ப்பனரே! ஏன் பயம்; பொன் வளையல் தருகிறேன்; தானம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூற, அந்தணருக்கு ஆசை வந்து விட்டதாம்; உடனே அந்தக் கிழப்புலி 'ஸ்நானம் செய்து வாருங்கள்; தானம் பெறுவீர்' என்றதும், அந்தணர் குளத்தில் இறங்க, பேராசை கொண்ட அந்த பார்ப்பனரை, பசி கொண்ட அந்தக் கிழப்புலி, கொன்று தின்றதாம்; இல்லை இல்லை; 'வதைத்துத் தின்றது நெடுநேரம்'—வதைத்து தின்றதாம்! அந்தப் பார்ப்பனரை! கதைதான்; ஆனால் அது உள்ளடக்கியிருக்கும் கருத்து?

முன்பு 'பேராசைக் காரனடா பார்ப்பான்' என்று பாடினார் பாரதியார். இன்று 'பொன்னுசைப் பார்ப்பான்!' என்று தலைப்பிட்டு, அந்த பாடலுக்கு சித்திர விளக்கம் போட்டுக் காட்டுகிறது சுதேசமித்திரன் வார ஏடு!

அரசாங்கம் வெளியிட்ட சுவரொட்டிகளில், 'கிட்டே வராதே எட்டி நில்' என்று சொல்லுபவன் பார்ப்பனனைப் போல இருக்கின்றானும்! அதுதான் அந்த வகுப்பாரின் பளிங்கு(!) நெஞ்சத்தைப் புண்ணாக்கி விட்டதாம்;

இப்படி காரணம் கூறி அன்று ஓலமிட்ட, அய்யர் வட்டாரத் தோழர்கள்; சு. மி. ஏட்டின் சித்திர விளக்கத்தற்கு யாது பதிலிறுப்பரோ நாம் அறியோம்!

பஞ்சகச்சம், பட்டை பட்டையாக விபூதி கழுத்திலே உதிராட்சம், மார்பிலே பூணூல் பூசுரக் குடுமி, இதோடு நிற்கவில்லை; 'பொன்னுசைப் பார்ப்பான்' என்ற மகுடம் வேறு அந்த சித்திரத்திற்கு!

சர்க்கார் சுவரொட்டிகளிலோ—பார்ப்பான் என்ற வார்த்தை கூட குறிக்கப்படவில்லை! இருந்தும் பூதேவர்கள் இதயம் புண்பட்டதே என்று புலம்பினர்,

சித்திரம் போட்டுக் காட்டுகிறது பார்ப்பனன் பேராசைக்காரன் என்று!

சர்க்காரோ வெளியிட்ட சுவரொட்டிகளைக் கூட வாபஸ் வாங்கிவிட்டனர்!

அதுவும் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலரின் ஓலம் கேட்டு! பிறகேன், தீண்டாமை இந்த மண்ணிலே சதிராடாது!

மித்திரனுக்கிருக்கும் துணிவு கூட, ஒரு சர்க்காருக்கு இல்லை; இதன் உட்பொருள் என்ன? சிந்திக்க வேண்டும்!

★

சென்ற கிழமை இந்தூரில் பேசியிருக்கிறார் மத்திய அமைச்சர் ஒருவர். "தீண்டாமை என்பது ஒரு சமுதாயப் பிரச்சனை. இக் கொடுமையை ஒழிக்க சட்டம் மட்டும் போதாது. ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்டவர்களுடன் சமமாகப் பழக முன்வர வேண்டும்."

"சட்டப்படி தீண்டாமை குற்றமாக்கப்பட்டிருக்கிறது, ஆனால்இன்னும்பல இடங்களில் தீண்டாமைவழக்கிலிருக்கிறது"

"தாழ்த்தப்பட்ட மக்களை சம நிலைக்கு கொண்டு வரும் வரை மக்களாட்சி வெற்றி பெறாது"

★

ஆமாம், புரையோடிப் போயிருக்கும் புண்ணுக்கு புனுகு மட்டும் போதாது; ரணசிகிச்சையும் தேவைப் படலாம்; நோயாளியின் மனம் நோகுமே என்பதற்காகத் தயங்கினால் நோய் தீருவதெப்படி!

நோய் நீங்க, ரண சிகிச்சை எப்படி தேவையோ—அதைப் போலத்தான் தீண்டாமைநோய் போக, 'சுவரொட்டி' போன்ற சிகிச்சைகளும் தேவை!

இந்நிலையில் நோய் கொண்டோர் மனம் புண்படாமல் பூரிக்கவா செய்யும்?

இன்னும் நோய் தீரவில்லையென்று வருந்துகிறார் மத்திய அமைச்சர் பி. என், தத்தார்!

இங்கிருப்பவர்களோ ரண சிகிச்சையே வேண்டாமென்கிறார்கள்!

மித்திரனோ சித்திரம் போட்டு விளக்குகிறது!

சர்க்காரோ, நோயாளியின் மனம் புண்படுகிறதே என்று சிகிச்சை செய்ய அஞ்சுகிறது!

இந்நிலையில்; அமைச்சர் கூறியபடி; மக்களாட்சி வெற்றி பெறுவதென்னாளோ?

★

பிச்சை எடுக்கப் பிணைப்பா...!

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

வாசி வழக்கம்போல டெல்லியிலிருந்து 'யாசகம்' பெற்று அவர் கூறிய திட்டங்களை நிறைவேற்றப் பார்க்கலாமே!

அறுபது கோடி வேண்டுமென்று பல்லைக் காட்டினால் ஏதோ முப்பது கோடியாவது தருவார்கள்; அதை வைத்தாவது தினைத்துணை செயல்புரிய இவர்கள் திட்டம் வகுக்கலாமே?

அமைச்சர் சுப்பிரமணியனாரே கேரளச் சீமையோடு கூட்டுறவு கிடைத்தால்தான் தமிழகம் தலைதூக்க முடியுமென்று துந்துபி முழக்கும் துரைத்தனத் தேரோட்டிகளே! பிச்சை எடுப்பதற்காக பிணைப்பு வேண்டாம்; கேவலம் வட நாட்டிடம் யாசகம் வாங்குவதற்காக நம் எல்லைக் கோட்டை அழித்து விட வேண்டாம்!

தாயகத்தின் மேன்மையிலே அக்கறை கொண்டதாக நவிலும் அமைச்சரே! திட்டக் கமிஷனுடன் அறுபது கோடி கேட்போம்; கிடைக்கா விட்டால் ஏகாதிபத்தியக் கூடாரத்தைக் கிழித்தெறிவோம்! கீழோரின் உறவுகளை அறுத்தெறிவோம் எனக் குரல் கொடுங்கள், அதற்கு கேரளத்தை அழையுங்கள்! உமக்கும் முன்னே எமது படை செங்கோட்டை வாயிலிலே வெற்றிக் கொடி பிடித்தபடி, எதிரிகள் முகாமை சுற்றி வளைத்தபடி இருக்கும்—என்பதைத்தான் இந்த நேரத்தில் அவருக்குக் கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். ★

"நான் கேட்க வேண்டும் என்றிருந்தேனே, ஏன் சார்-ஏன் சில நாட்களாக உங்கள் பையனை உங்களுடன் காணோம்?" என்று கேட்டேன் நான், அந்தப் பெரிய மனிதரிடம்.

அவர் பெரும் பணக்காரர்—ஆனாலும் நல்லவர். அவருக்கு ஒரு மகன் போலும். அவர்கள் இருவரையும் தினம் தவறாமல் மாலை நேரத்தில் பூங்காவில் சந்திக்கலாம் சில நாட்களாக அவர் மட்டுமே தனியே வந்தார், மகனின்றி; ஆனால் மனக்கவலையுடன். ஆகவேதான் கேட்டேன் அப்படி.

"அதுவா? அவனுக்கு உடல் நலம் சரியில்லை!" என்றார் அவர், மிக வருத்தத்துடன்.

"என்ன உடம்புக்கு?"

"அவனை... பேய்...பேய்...பேய் பிடித்துக் கொண்டது..." என்றார் அவர், பொங்கிவந்த அழுகையை அடக்க முடியாமல்.

"பேயா? என்ன இது? அதையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா?" என்றேன் நான் படபடப்புடன்.

"நம்பாமல்தான் இருந்தேன். ஆனால், நானே பாதிக்கப்பட்டுவிட்டேனே, இப்போது!

"கேள் தம்பி, நான் இந்த ஊருக்குக் குடிவரும் போதே என்னை பயமுறுத்தினார்கள் பலர். நான் இப்போது இருக்கிறேனே அந்த மாளிகைக்கு 'பாழடைந்த பங்களா' என்று பெயராம். ஆனால் நான் அதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. 'ஒரு வீடு பல ஆண்டுகள் பூட்டியே கிடந்தால், வௌவால்களும் விஷப் பூச்சிகளும் குடிபுகுந்து விடுகின்றன. ஆனால் இந்த பொல்லாத மக்களோ, அவற்றுடன் பேயையும் பிசாசையும்கூட தாங்களே குடிவைத்து விடுகிறார்கள்'—என்றுதான் நான் நினைத்தேன். அந்த வீட்டை புதிதாக்கினேன்—சுண்ணாம்பு பூசினேன்-தோட்டம் அமைத்தேன்—அழகிய மாளிகையாக்கினேன். என் மகன் ரவி இருக்கிறானே, அவனுக்கு ரொம்பவும் மகிழ்ச்சி! ஆனால், அதே மாளிகையில் அவனை சித்திரவதை செய்ய ஒரு 'பேயும்' வரும் என்று அப்போது உணரவில்லை!

"சமீபத்தில் ஒருநாள்... நடு இரவு! நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த என்னை "ஐயோ!..ஐயோ!" என்ற ரவியின் பயங்கர அலறல் எழுப்பியது. நான் திடுக்கிட்டு விழித்தேன. என் செல்வனுக்கு என்ன நேர்ந்ததோ என்று தலை தெறிக்க ஓடினேன், அவனது அறைக்கு! அங்கே...?கண்களை கைகளால் பொத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ரவி. "என்னடா கண்ணு, என்ன? என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஓடினேன்.

"அவன் கைகளை எடுக்கவில்லை; நான் கைகளைப் பற்றினேன். அவைகள் வெடவெட என்று நடுங்கிக் கொண்டிருந்தன. ஆனால் அவன் பேசவில்லை. விழியை மூடாமல் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்தான். எனக்கு எப்படியிருக்கும்? பக்கத்திலே வந்துவிட்டால், "அப்பா" என்று பாய்ந்து அணைக்கும் செல்வன், பயங்கரமாகப் பார்த்தபடி இருந்தால்...? நான் அவனை வாரி எடுத்தேன். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. "என்னம்மா, என்ன?" என்றேன் துடித்துக் கொண்டு. "அப்பா! அப்பா! பேய்!...பேய்!" என்று அலறினான். தோட்டத்துப் பக்கம் சுட்டிக் காட்டினான்.

"நான் அப்போதுதான் தோட்டத்தைக் கவனித்தேன். சாசர என்ற சப்தம் மட்டும் கேட்டது. ஆனால் எதையும் காணோம். தேடினேன்; பலனில்லை. நான் யோசித்தேன்.

சரியான பதில் கிடைக்கவில்லை; பயம் கலந்த குழப்பம்தான் மேலிட்டது. ஏதோ சமாதானமடைந்தேன். அன்றிரவு கழிந்தது.

"மறுநாள் இரவும் அதே கதிதான்! ஆனால் இம்முறையோ ரவி அலறியதோடு மட்டுமல்ல; 'ஓகோ' என்று அழவும் ஆரம்பித்து விட்டான். பேய் வந்ததாம்; அவனைத் தொட்டதாம்; கன்னத்தைத் தடவியதாம்; தலையைக் கோதியதாம்; கடைசியில் ரவி அலறியவுடன் ஓடி மறைந்து விட்டதாம்! நான் பயந்தே போனேன். "பேய் எப்படி இருந்தது?" என்று கேட்டேன். பாவம், பயந்த பிள்ளை, அதை வர்ணிக்க முடியாமல் திண்டாடினான். மிக மிக பயங்கரமான உருவமாம்! அடர்ந்த தலை—நீண்ட பற்கள்—உடம்பெல்லாம் ரத்தக்கரை-இப்படி இருந்ததாம்! நான் என்ன செய்வது? இப்படியே சில நாட்களாக நடைபெறுகிறது. ரவியின் நிலைகண்டு நான் அழுகிறேன். ஆனால், இன்று நானும் அவனுடன் படுத்து விழித்துக்கொண்டேயிருக்கப் போகிறேன்" என்றார் அவர்.

இருட்டி விட்டது. புறப்பட்டு விட்டார். எனக்கு ஒரே புதிர்!

★

மறு நாள்...

முதல் நாளைவிட சோகமாக உட்கார்ந்திருந்தார் அவர்.

"உண்மைதான் தம்பி! பேய் உண்மையிலேயே வந்துவிட்டது!" என்று அவர் பதறினார்

"நீங்கள் பார்த்தீர்களா?" என்றேன் நான்.

"நேற்று இரவு அறையில் நானும் ரவியும் படுத்திருந்தோம். வெகு நேரம்வரை விழித்திருந்தேன். கட்டிலில் என்னையறியாமல் சற்று கண்ணயர்ந்தேன். ஆனால், உடனே "ஐயோ!... ஐயோ!" என்ற அலறல் கேட்டு விழித்தேன். நான் அணைத்திருந்த அறை விளக்கு அப்போது எரிந்து கொண்டிருந்தது. யாரோ வேகமாக ஓடும் காலடி ஓசை கேட்டது ரவி படுக்கையிலே தாறுமாறாகக் கிடந்தான். அவன் விக்கி விக்கி அழுது கொண்டே சொன்னான்: தூங்கிக்கொண்டிருந்தவனை யாரோ தூக்குவது போல் இருந்ததாம்; விழித்துக் கொண்டானாம்; அவனைத் தூக்கிக் கொண்டிருந்தது அந்தப் பேயே தானும்! உடனே பயந்துபோய் அலறியிருக்கிறான்; பேய் அப்படியே அவனைப் படுக்கையில் போட்டு விட்டு ஓடி விட்டதாம்! நான் உடனே வெளியேஓடினேன்; பார்த்தேன்; வேலையாட்களை எழுப்பினேன்; தேடினேன்; பலனில்லை. இப்போது ரவி பைத்தியம் பிடித்தவனைப் போல் பிதற்றுகிறான்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் விபரமறிந்த என் உறவினர்கள் வந்து விட்டார்கள். ரவியைப் பேய் பிடித்தாட்டுகிறது என்கிறார்கள். நாளைக்கு அவனை யாரோ மந்திரவாதியாம்—பேய் ஓட்டுவதில் கெட்டிக்காரனாம்—அவனிடம் அழைத்துப் போகப் போகிறார்கள்."

★

இத்துடன் அன்றைய பேச்சு முடிந்தது. எனக்கு ஒரே குழப்பம்! இந்தக் குழப்பம் மறுநாள் பரிதாபமாக மாறி விட்டது. 'பேய் ஓட்டுகிறேன்' என்று அந்த மந்திரவாதி ரவியை அடிக்கிறானும். கேட்டால், 'அடிபடுவது உங்கள் மகனல்ல; பேய்; ஓடப் போகும் பேய்!' என்று சொல்லுகிறானும். ரவி அழுது அழுது மாய்கிறானும். இதை எல்லாம் அந்த மனிதர் சொன்னபோது உண்மையிலேயே பச்சைக் குழந்தையைப் போல அழுது விட்டார். நம்ப முடியாத 'பேய்' ஒன்று-அது ஒரு ஏதுமறியா சிறுவனுக்கு இழைத்திடும் தொல்லைகள்—பேயை ஓட்டுகிறேன் என்று அவனை வாட்டும் மந்திரவாதி—அப்பப்பா! எத்தனை குழப்பங்கள்!

★

ஒரு வாரம் கழித்து நான் அவரை மீண்டும் சந்தித்தேன். அன்று அந்தப் பேய்க் கதைக்கு முற்றுப்புள்ளியும் விழுந்தது.

அவர் சொன்னார்:

"தம்பீ!...இன்று ஒரு புதிய-பெரிய செய்தி சொல்லப் போகிறேன். பாதி இரவிலே என் ரவியைப் படாதபாடு படுத்திய அந்தப் பேய்...

"கேள், அன்று இரவு ரவி பங்களாவில் இல்லை. மந்திரவாதியின் வீட்டிலே பூசை நடந்து கொண்டிருந்தது. நான் மட்டும் மாடியில் நின்றுகொண்டிருந்தேன். நடுநிசி! அப்போது இருள் சூழ்ந்திருந்த ரவியின் அறையில் 'குப்'பென விளக்கு எரிந்தது. நான் பயந்து போனேன். கையிலே கிடைத்த இரும்புத் தடி ஒன்றை எடுத்துக்கொண்டேன். மெதுவாக இறங்கி வந்தேன். துணிவை வரவழைத்துக் கொண்டு "யாரது?" என்றேன். மறுகணம் விளக்கு திடீரென்று அணைந்தது. அறைக்குள்ளிருந்து 'குபீர்' என்று பாய்ந்து ஓடியது ஒரு உருவம்! நான் கொஞ்சமும் யோசிக்கவில்லை. பலநாளைய பரிதவிப்பு அல்லவா, கையிலிருந்த அந்த பெரிய இரும்புத் தடியால் அந்த உருவத்தின் மண்டையில் தாக்கினேன்; முழுபலத்துடன் அடித்தேன். மறுகணம் "ஐயோ, ரவி!" என்ற பயங்கர அலறலுடன் அந்த உருவம் கீழே சாய்ந்தது! பேய் பேசுமா? — நான் ஏதும் புரியாமல் விளக்கைப் போட்டேன். திடுக்கிட்டேன். எதிரே இரத்த வெள்ளத்திலே-உருண்டு புரண்டு கிடந்தது பேயல்ல! ஆனால், ஒரு பயங்கர மனிதன்—பெரு வியாதிக்காரன் — விளக்கமாகச் சொல்லுகிறேனே, உடம்பெல்லாம் இரத்தமும் சீழும் வடியும் குஷ்டரோகி!

"நான் தடுமாறினேன். அந்த மனிதனே தன் குறைந்து போன கையால் இடையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்தான். என்னிடம் நீட்டினான். இதோ அந்தக் கடிதம்..." என்றார். கடிதத்தைத் தந்தார். நான் படித்தேன்.

"ரவி! என்னைப் பேயென்று நினைத்துவிட்டாய்? கண்ணே, பேய் என்று ஒன்று உலகில் இருந்தால், அதைவிடப் பயங்கரமானவன் நான். அந்த பயங்கரம்தான் நமது அப்பா—மகன் என்ற உறவையே பறித்து விட்டது! ஆமாம்; நான் உன் அப்பாதான்; ...பிறந்தவுடன் அம்மாவை இழந்தாய் நீ.நான் வளர்த்தேன்.ஆனால் எங்கிருந்தோ என் உடலில் புகுந்த பெரு நோய், உன்னை ஒரு பெரியமனிதரின் காரில் அனாதையாக விட்டுவிட்டு ஓடச்செய்து விட்டது. இவை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்தவை.ஆனால் கேட்கிறதா மனமும்—பாசமும்? உன்னைப் பார்க்கவந்த போதெல்லாம் பயந்து ஓடினேன். இன்றோ 'பேயா'கவும் ஆகிவிட்டேன். இதோ இன்றுதான் நான் உன்னை கடைசியாகசந்திக்கப்போகிறேன். நீ என்னைக் கண்டு பயந்தால் இந்தக் கடிதம் உன்னிடம் பேசட்டும்! என் நோய் அதிகரித்து விட்டது. ஆகவே பாசத்தை

★ தொடர்ச்சி 12-பக்கம்

கேள்விப்பக்கம்

எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்

(●) கே. எஸ். வி. ஆறுமுகம், தூத்துக்குடி.

எம். என். பழனிச்சாமி; சிவகங்கை.

(?) நமது அரசாங்கம் தற்போது பெண்கள் கையில் இருந்திருந்தால்...?

தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் பறிபோனது குறித்து மான உணர்ச்சியோடு பதவியை ராஜினாமா செய்திருப்பார்கள்!

மு. கலைமன்னன்; முடீசு.

(?) காங்கிரஸ் ஒரு நாடகமேடை என்கிறேன் நான்?

ஆமாம்; காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு அந்தச் சோக நாடகம் முடிந்திருக்க வேண்டுமென்கிறேன், நான்!

கே. சி. எல்லப்பன்; கவட்பேரி.

(?) பண்டித நேரு தற்சமயம் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் நடத்தினால் தமிழர்களின் வரவேற்பு எவ்வாறு இருக்கும்?

நிச்சயமாக அவருக்கு பம்பாயில் விழுந்த 'மாலை' இங்கே விழாது!

(●) கே. எஸ். வி. ஆறுமுகம்; தூத்துக்குடி.

(?) காமராசரின் நிகழ்காலம் எப்படி யிருக்கிறது?

'ராகுகாலமா'யிருக்கிறது — என் கிருர் 'எமகண்ட'த்தில் மாட்டிக் கொண்டிருக்கும் ஆச்சாரியார்!

'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

ஆண்டு சந்தா 7-0-0
ஆறுமாத சந்தா 4-0-0

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்ட்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

சாமுவேல்; கோவை.

(?) சாவு எப்படி யிருக்கும்?

நல்லவேளை; நம்மில் பலருக்கு அதைத் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை பிப்ரவரி 20 தரவில்லை!

கே. துரைசாமி; சீரங்கம்.

(?) தூக்கத்திலும் பிதற்றிக் கொண்டிருக்கும் என் நண்பரை என்ன செய்யலாம்?

ஒன்றும் செய்ய வேண்டாம்; விரைவில் அவருக்கு சென்னை மந்திரி சபையில் மராமத்து இலாக்கா பதவி கிடைக்குமென்று சொல்லி உற்சாகப் படுத்துங்கள்!

வி. கே. ஏழுமலை; சேப்பாக்கம்.

(?) நான் சென்னை கடற்கரையில் ஒருநாள் இரண்டு சூரியன் உதயமாவதைப் பார்த்தேனே?

ஆமாம்; பிப்ரவரி 20-ந் தேதியன்று அறிஞர் அண்ணா, பி. டி. ராஜன் ஆகியோர் மன்றத்தில் தோன்றியபோது நீ பார்த்திருக்கலாம்!

ஓ. வி. அம்பலவாணன்; நீடாமங்கலம்.

(?) இரா. நெடுஞ்செழியன் எத்தனைப் பவுண்டுகள் இருப்பார்?

நாடெங்கும் பரவிக் கிடக்கும் ஒரு லட்சம் தி. மு. க. அங்கத்தினர்களின் மொத்த எடை எவ்வளவோ, அவ்வளவு இருப்பார்!

குள்ளப்பன்; சேலம்.

(?) கடவுளின் எதிரி யார்?

நான் — அகந்தையைச் சொல்லுகிறேன்!

சாமிக்கண்ணு; குடந்தை.

(?) நிர்வாண சாமியார்கள் ஏன் மகா மகத்துக்கு வரவில்லை?

பிப்ரவரி 20-ந்தேதிக்குப் பிறகு காமராசர் ஆட்சி பீடமே 'நிர்வாணமாக' விட்டதே; அது போதுமென்று வராமலிருந்திருப்பார்கள்!

சின்னத்தம்பி; மாயூரம்.

(?) கவலை தெரியாமல் வாழ்வது எப்படி?

உடனே தீவிர காங்கிரஸ் கட்சி அங்கத்தினராகுங்கள்!

ஆர். சாரதா கோவை.

(?) துன்பம் என்பது யாது?

அதிகமான நண்பர்களிருந்தால் அவர்களுக்கு ஏற்படும் வியாதி தான் அது!

ஏப்ரல் முதல் வாரத்தில் ஆரம்பமாகிறது!

வெள்ளிக்கிழமை

மு. கருணாநிதி

— எழுதும் —

உணர்ச்சிமிக்க தொடர் சித்திரம்.

★

(தேவையான அதிகப் பிரதிகளுக்கு ஏஜண்டுத் தோழர்கள் முன் கூட்டியே அறிவிக்கவும்.)

★

எஸ். டி. தாஸ்; கீளக்கோட்டை

(?) காங்கிரஸ் என்ற பழம், காந்தியாருக்குப் பின் அழுகிவிட்டதே ஏன்?

சுயநலக் கிருமிகளுக்குப் பசி வந்துவிட்டதே அதனால்!

என். பலராமன்; ஆரணி.

(?) பிப்ரவரி 20-ந் தேதி வேலை நிறுத்தம் ரஷ்யாவில் நடைபெற்றிருந்தால்...?

அது நடந்து முடிந்ததன் பயனைத் தானே இன்று ரஷ்யர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்!

பிறைவானம்......

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மட்டுமல்ல; வாழ்வையே துண்டித்துக் கொள்ளப் போகிறேன்... அதற்குள் ஒருமுறை நீ மனதார நினை...நான்தான் உன் அப்பா!"

நான் படித்து முடித்தேன்.

அவர் பேசினார்: "படித்தாயா? இந்தக் கடிதத்தை நான் படித்தவுடன் அந்த மனிதர் அங்கே இல்லை. என் பங்களாவுக்கு கூப்பிடு தூரத்திலே ஓடிக்கொண்டிருக்கிறதே ஆறு, அதை நோக்கி ஓடிக் கொண்டிருந்தார். நான் தொடர்ந்து ஓடினேன். ஆனால் அதற்குள் 'தொபீர்' என்ற சத்தத்துடன் அவர் ஆற்று வெள்ளத்திலே மறைந்தார்."

"அப்படியானால்......ரவி...?" என்று நான் இழுத்தேன.

"கடிதம் சொல்வது உண்மை தான் தம்பி! ஆனால் நான் இதை ரவிக்கு தெரிவிக்கவே போவதில்லை. மேலும் எனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை; இனி நடைபெறவும் போவதில்லை!" என்றார் அவர்.

★

ரவி இப்போதெல்லாம் பூங்காவுக்கு வருகிறான். அவனுக்கும் 'பேய்' வருவதில்லை என்பதில் மகிழ்ச்சி—மந்திரவாதிக்கோ பேயை விரட்டிவிட்டானென்று ஊரில் புகழ்ச்சி! ஆனால் அவனது பிரம்பு தந்த அடிகள், ரவியின் உடலில் தழும்புகளாக—இன்னும் காட்சி தருகின்றன!

—சொர்ணம்

விற்பனையாகிறது!

5-வது இதழ்

'வெள்ளி வீதி'

(மாதம் மும்முறை சினிமா இதழ்)

'வெள்ளி வீதி'
28-3, கிராம்ஸ் ரோடு,
நுங்கம்பாக்கம் :: சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6